சிவமயம்.

# மெய்ஞ்ஞானசாரம்

மூலமும் - உரையும்,

பேஸறை - திருஞானசம்பந்தசுவாமிகளால்

அருளிச்செய்யப்பட்டன.

இவை

திருத்தணிகை - சரவணப்பெருமாளையர்குமாரர

கந்தசுவாமிஐயரால்

பார்வையிடப்பட்டு

பாடி - தியாகராயசெட்டியார்

கேட்டுக்கொண்டபடி

இந்து-அச்சுக்கூடத்திலச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

சென்னபட்டணம்.

சாலிவாகனசகாப்தம் - தளாஎய௨ - சௌமியஞூ பங்குனிமீ

முருகன்றுணை.

## நூற்சிறப்புப்பாயிரம்,

### கா - சபாபதிமுதலியார்பாடல்.

என்ஞானமெய்ப்பதியா மேவைப்புகழ்மேயோருய — ய
மெய்ஞ்ஞானசாரம்விளம்பிய - சீர்ஞானம்
வாய்ந்ததிருஞானசம்பந்தமாதவனு - க்
கேய்ந்துசெய்கைம்பாதிங்கி — ஙு

### கோ - நித்தியானந்தசுவாமிகள்பாடல்.

சுருதியெனும்பன்மலரின்சாரமெனுமதுவனைத்துஞ்சுரும்பிற்சே
ர்த்தே - - - - - -
யிருமையொழித்தொன்றுக்குமெய்ஞ்ஞானசாரமெனுமித்தேனீந்
தா - - - - -
ஞெருவிருமறியாதவெனைபுராழ்வார்சனனமறவுணர்த்துஞானப்
பொருளுடையதிருஞானசம்பந்தனெனுங்கோவன்புவியுளோர்க்
கே. - -

### தொ - நாராயணசாமிமுதலியார்பாடல்.

அரும்புகழ்ஞானசம்பந்தவடிகளருளுமெய்ஞ்ஞானசாரந்தான்
பெரும்பவக்கடற்கோர்வங்கமாய்மாயைப்பேயகற்றுமந்திரமதாய்
வினையாங் - - - - -
கருப்பொனுக்கரமாய்ச்சொருபமாம்ரவியைக்கண்டிடக்கண்ணை
தாய்முத்தி - - - -
யிருப்பதிக்கணித்தாநெறியதாயறிஞரியாவர்க்குமுதவுநீர்மைய
தே.

### சோமசுந்தரவாத்தியார்பாடல்.

மானசம்பந்தன்கரத்தேந்தியாலயன்வாழ்த்தவ — ரி
தானசம்பந்தமுறச்சொன்மறைமுடிவாய்ந்துதி — ரு
ஞானசம்பந்தன்மெய்ஞ்ஞானசாரநவின்றனன்சீ — ர்
வானசம்பந்தமுலகோர்பெற்றுய்யவிவ்வையகத் — தே

## ஸ்ரீ - சுந்தரானந்தர்பாடல்.

கடல்புடைபரந்தகாசினிமாக்..................கு
ளடல்சேர்கன்மவனுபந்தங்க..................ளா
ணீடுமஞ்ஞான நினைவினையகன்.................று
கூடுமெய்ஞ்ஞானக்குறிநெறியறிந்..............தே
யிச்சையென்பதிரிந்திடப்பெயர்த்து.......... ச்
சச்சிதாநந்தந்தானேயா..................க
வாநந்தாந்தமாகியகுகேச..................ன்
றனேமானிடச்சட்டகங்கொண்டி............ த்
தானமதனிற்சார்ந்தினிதமர்தி.................ரு
ஞானசம்பந்ததேசிகநாம....................ந்
தரித்துமெய்ஞ்ஞானசார நூல்சாற்றின...... ன்
றிருத்தவந்நூற்கவித்திறத்தியல்காப்பொ......ன்
றட்டப்பிரமாணமஃதோரொட்..............டு
டிட்டமாஞ்சிவணுதிகண்டமன்...............று
சட்விதலிங்கத்தன்மையதோரொ..............ட்
டிட்டமாகியசட்சமாதியிரண்...............டு
சச்சிதாநந்தத்தகுதியோரா..................று
துச்சவேழாவரணத்தொடரான்...............று
பஞ்சகோசப்பான்மையதொன்................று
விஞ்சுசாக்கிராதிவிளம்பும்பாவொ..........ன்
றுண்மைநிலையையுரைத்தலொன்..............று
திண்மகாவாக்கியஞ்செப்பலொன்.............று
வாகுவாழ்த்தொன்றுவளர்முப்பானு.........ன்
காகுந்தொகையென்றறையப்படு............மே

## ஸ்ரீ - சுந்தரானந்தர் பாடல்.

### உரைச்சிறப்புப்பாயிரம்.

மணிகிடந்தொளிரும்வயல்செறிபேறை...........
மாநகரந்தனையுடையோன்...........*
வருத்துமைம்புலத்தைக்கடிந்துநெஞ்சகத்தை.
மாற்றியோரறிவினிற்சேர்த்தி...........*
யணிசொலுமறிவுக்கறிவதாயிருந்த...........
வரும்பதமடைந்தபேரருளா...........*
னமைதிருஞானசம்பந்தனென்பா...........
னமிழ்தெனவாய்மலர்ந்துரைத்த...........*
திணிகொண்மெய்ஞ்ஞானசாரநூலதற்குச் ... ...
செய்திநீயுரையென்னச்...........*
செப்பினனுகச்சொர்க்கபுரச்சார்...........
திகழ்சுப்பிரமணியனுமுனிவ...........*
னுணியகூரறிவோரியாவரும்வியப்ப...........
நொய்யறிவோர்களுநயப்ப...........*
நோக்கமில்லவருஞ்சூக்கமுற்றறிய...........
நுவன்றனனவனுவன்றங்கே...........*

உ

வேலுமயிலுந்துணை

# மெய்ஞ்ஞானசாரம்.

மூலமும்-உரையும்

காப்பு.

பூமலிந்தசிற்றம்பலப்பொருளென நின்ற ...... *
வோமெனும்பதச்சச்சிதாநந்தனையுன்னி ...... *
வாமதேசிகக்கருணையாநந்தனைவணங்கித் ...... *
தோமறச்சொலப்படுந்தொன் மெய்ஞ்ஞானசாரமதே.

(இதன்பொருள்.) பூமலிந்த - விளக்கமானதுமிகுந்த—சிற்றம்பலப்பொருளென நின்ற - சிதாகாசத்தருத்தமென்று வேதாகமங்கள் கூறும்படியே வைக்குங் காரணமாகிய தாரகமாய்நின்ற—ஓமெனும்பதம் - ஓங்காரமென்றுசொல்லப்பட்டமூன்றெழுத்துப்பதத்தினது நிறைப்பொருளாகிய--சச்சிதாநந்தனையுன்னி - சத்துச்சித்தாநந்த சொரூபனாகியபரமதேவனை நிரந்தரஞ்சிந்தித்து—வாமதேசிகக்கருணையாநந்தனைவணங்கி - நித்தியவனப்புப் பொருந்திய கருணையாநந்தனென்னுந் திருநாமத்தையுடையவாசாரியனைமுக்கரணத்தினாலும்வணக்கஞ்செய்து—தொன்மெய்ஞ்ஞானசாரமது -பழமறைப் பொருளாகிய மெய்ஞ்ஞானசாரமென்னு

மிந்நூல்—தோமறச்சொலப்படும் - அஞ்ஞானக்
குற்றங்களெல்லாமறும்படியென்றுகூறப்படுமெ
ன்றவாறு.— இங்ஙனந்தெய்வவணக்கத்தோடுகுரு
வணக்கங்கூறியதென்னையெனின் - தெய்வமேகா
ருண்ணியத்தாற்குருவடிவாய்ப் போந்ததாகலானு
மக்குருவையின்றித்தெய்வநிலைகாணப்படாமையா
னுமிவ்விரண்டுமொன்றாகியவொற்றுமை நயங்கரு
தியென்க. சித்தம்பலமென்பது - சிற்றம்பலமெ
னத்திரிந்துநின்றது. ஓமென்னுமெழுத்தென்னு
துபதமென்றது- ஓமென்னும்பதமதனில்வேதமா
தியுற்பவிக்குமாலம்வித்தினுதிக்குமாபோ, லோ
மென்னும்பதமதனையுணர்த்தார்தாமேயுணர்த்தாரு
ம்வேதாதியுணர்களெல்லா, மோமென்னும்பதப்
பொருளையுணர்ந்தார்தாமே யுணர்ந்தாரும்வேதா
தியொருமைகூர, வோமென்னும்பதமொழித்தை
ந்தெழுத்துமாதர்க்கொழுங்குலடையசூத்திரர்க்குமு
ரைக்கலாமே. என்னுஞ்சிவதருமோத்திரச்செய்யு
ட்பிரயோகம்போலுமாம். ஓமென்னும்ப தச்சச்சி
தாநந்தனையென்பதனுள் - அகாராதிமூன்றிற்குஞ்
சத்தாதிமூன்றினையுநிரைநிரையாகப் பிரித்துரைத்
துக்கொள்க. மெய்ஞ்ஞானசாரமதேயென்பது
அழலதுவேந்தியென்பது போற்பகுதிப்பொருள்
விகுதி. தோமறச்சொல்லப்படுமென்பது சொ
லப்படுமெனத்தொகுத்தல்விகாரமாயிற்று. இவ்
வாறுவருந்தொகுத்தன்முதலியனவெல்லாஞ்செய்

யுள்பற்றிவருவதெனக்கொள்க. ஏகாரமீற்றசை. மெய்ஞ்ஞானசாரமது தோமறச்சொலப்படுமெனக்கூட்டுக. தெய்வவணக்கமுங்குருவணக்கமுமுடன்கூறுதற்குப்பிரமாணம். தருக்கசங்கிரகம் - மன்றவாணனைமனத்திடை நிறுவிவண்டுறைறசை, வென்றசீர்நமச்சிவாயமெய்க்குரவனைவணங்கி, யென்றனைப்பொருஉமிளையவர்க்கினிதுணர்வுதிப்பத்,தென்றமிழ்ச்சொலாற்செயப்படுந்தருக்கசங்கிரகம். என்பதனாற்காண்க. இச்செய்யுளாற்றெய்வவணக்கமுங்குருவணக்கமுஞ்செயப்படுபொருளுங் கூறியவாறுணர்க..................................*

உலகின்கட்காட்சிமுதற்பிரமாணமெட்டிலுறுகாட்
சிசந்தேகமுதலியனமூன்றிற் ..................*
குலவுலைமயங்கட்டையோகள்ளனேவெனல்போற்..
கூடத்தனேசீவனேநானெனன்றயிர்த்தல்........*
சொலும்விபரீதங்கட்டையன்றுகள்ளனெனல்போற்
றனுஞ்சாட்சியன்றுநான்சீவனெனத்துணித.*
னலயதார்த்தங்களனன்றிந்தனமேயெனல்போ.....
ருன்சீவனலன்சாட்சியெனத்திடநண்ணுதலே..*

(இ—ள்.) உலகின்கண் இவ்வுலகத்தின்கண்ணே—காட்சிமுதற்பிரமாணமெட்டில் பிரத்தியக்கமாதியட்டப் பிரமாணங்களுள்—உறுகாட்சி-ஓர்பிரமாணமாகப்பொருந்தியகாட்சிப்பிரமாணத்தைக்கூறுமிடத்தில்—சந்தேகமுதலியனமூன்றில்

சந்தேகம்விபரீதமெதார்த்தமென்னு மூன்றனுள்
ளும்—குலவுமையம்- பொருத்தமானசந்தேகப்பி
ரத்தியக்ஷமியாதெனில்--கட்டையோகள்ளனோவெ
னல்போல் - மாலைக்காலத்திற்செய்மைக்கண் முன்
னிலைப்படவோர்வடிவினைக்கண்டவோர்புருடனத
னைக்கட்டையோகள்ளனோவென்று சந்தேகிப்பது
போல—கூடத்தனோசீவனோநானென்றயிர்த்தல்
பெத்தகாலத்திற்குழுத்திக்காலத்திற்குமிடையான
காலத்தின்முமுட்சுவானவோர்புருடன் சேதனனா
கியயான்அவத்தாத்திரயரகிதசாட்சியாகியகூடத்த
னோ வவ்வவத்தாத்திரயசகிதனாகியசீவனோவென்று
சந்தேகித்தலாம்—சொலும்விபரீதம்-அதனோடுசே
ர்த்துக்கூறும்விபரீதப்பிரத்தியக்ஷமியாதெனில் —
கட்டையன்றுகள்ளனெனல்போல் - அப்புருடன்ற
னதுதேககம்பத்தாலவ்வுருவமசைவதாகக்கண்டிஃ
துகட்டையன்றுகள்ளனேயெனவிபரீதப் பட்டது
போல— துனுஞசாட்சியன்றுநான் சீவனெனத்து
ணிதல் சற்கருமபரிபாகத்தாலுலகந்துன்பமெ
னக்கண்டவனாதலாற்றுன்பத்தோடவத்தாத்திரயங்
களிலுமலையுநான்ஆநந்தமாகியகூடத்தனன்றுசீவ
னேயெனத்துணிந்துகோடலாம்— நலயதார்த்த
ம் - இவ்விரண்டினுநன்மையாகியயதார்த்தப்பிரத்
தியக்ஷமியாதெனில்—களனன்றிந்தனமேயெனல்
போல் அப்புருடனுக்கணித்தாகத்தெய்வீகமாக
வோர்புருடன்றோன்றியிவன்கலக்கமுணர்ந்திவ்வுரு

வங்கள்ளனன்றுகட்டையேயெனப் புலப்படுத்திய
துபோல— நான் சிவனலன்சாட்சியெனத்திடநண்
ணுதலே - காருண்ணியத்தான்மகாதேவன்குருவடி
வுகொண்டெழுந்தருளிச்சுருதியுத்தியனுபவத்தாலு
ணர்த்தவுணர்ந்ததனானவத்தாத்திரய சகிதனாகிய
சிவனலனவ்வவத்தாத்திரயரகிதனாகிய சாட்சிசைத
ன்னியனென்றிடவுணர்ச்சிபெற்றிருத்தலாமென்
றவாறு.— இதன்கட்கூறியபிரத்தியக்கப்பிரமாண
த்தின்பொருட்டேமற்றைப்பிரமாணங்களெல்லாம்
பிறந்ததாகலானுமிப்பிரமாணமில்லாவிட்டால்மற்
றைப்பிரமாணங்கள்வேண்டாமையானுமிப்பிரமா
ணத்திலெல்லாப்பிரமாணமுமடங்குதலானுமிப்பி
ரமாணமேமுக்கியம். இப்பிரமாணத்தாற்றானேபு
ருடார்த்தங்கூறவேண்டுமென்றுணர்க. அங்ஙனமா
யின் இப்பிரமாணங்காட்சியன்றேவதனாற்புருடா
ர்த்தங்கூறப்படுமோவெனில் அக்காட்சியிலக்கண
மிருவகையாம் - அவற்றுண்முன்னிலைக்காட்சியால
றியப்படாதென்பதைக்கருதியே இந்நூலிலாறுலி
ங்கங்கூறியவிடத்தில் - தரித்தவளவைகளினுபநிட
தவளவையினாலேற்றவிலக்கணையாயாத்துமாவறிய
ப்படுவனெனவபூர்வத்துவலிங்கத்தாற்கூறியதென
வுங்குருமுன்னிலையினுணருமெய்யுணர்ச்சியாகியத
ன்மைக்காட்சியாலெதிரீடற்றசங்கற்பமாயறியாதறி
யப்படுமென்பதைக்கருதியேயீண்டிப்பிரமாணத்
தாலறிவதாக்க் கூறியதெனவுமுய்த்துணர்ந்துகொ

ள்க. இவ்வாறுகொள்ளாக்காலபரோட்சஞானமே
யின்றாய்முடியுமென்க. எனவே. இஃதுதன்னை
த்தானுணர்வதாகியபிரத்தியக்கமுத்தியைக் கூறிய
தென்பதாயிற்று. அப்பிரத்தியக்கமுத்தியாவதியா
தெனின்மற்றையமார்க்கம்போலத்தேகாந்தத்தின்
முத்திகூறுதித்தேகமிருக்கும்போதேயடைவதாகி
யசீவன்முத்தியைக்கூறியதெனவுணர்க. அற்றேல்
சீவனிருக்கும்போதே முத்தியாயின் தேகாந்தத்தி
ல்யாதுகதியெனின்முயற்சியின்றித்தானேயடைவ
தாய்ப்போனவழிதிரும்பாததானவிதேகமுத்திப்ப
தம்பெறப்படுமென்றுணர்க. காருண்ணியத்தாற்
கடவுள்குருவடிவாய்வருவதற்குப்பிரமாணம்- அதி
ரகசியம் - இவ்வண்ணம்புலம்பும்வேலையீசனுமு
ளத்திரங்கி, புய்வண்ணமறிய நின்றவுவனையோர்வச
னத்தாலே, பொய்வண்ணநீக்கிநம்போற்புனிதனுக்
குவனென்றுன்னி, மெய்வண்ணமுடையார்போல
மேதினிவந்தானன்றே. என்பதனாற்காண்க. தன்
மைக்காட்சியாலெதிரீடற்றறியாதறியப்படுமென்ப
தற்குப்பிரமாணம். ஒழிவிலொடுக்கம் - மறவாத
தம்மையறிவார்மருளோ, வறிவோவிடயம்போலா
கி, லறிவை, யறிவதறிவாகையினாலாறுறந்தத்து,
மறிவையறியாபோலறி. பூரணவாநந்தமாந்தானே
புறம்புபால், வாரியின்மீன்போன்றமலவாழ்வை
ப், பாரீ, குறியாதுநின்றவொளியையிருளாக்கு,
மதுகாணுமக்கினித்தம்பம். என்பனவாலும். ஞா

னவாசிட்டம் - எல்லா நீக்கிமகாமவுனத்திருப்பாய் திருவாணத்தினுய்ப், பொல்லாமனம்போய்ச்சித்தம்போய்ப்புத்திபோய்த்தானென்பதும்போய்ச், சொல்லாவுமைகுருடுசெவிடொத்துத்தூயவான்மாவி, னில்லாயுள்ளேமுகமாகிநித்தநொய்தாய்நிறைமதியாய். என்பதனானும். பிரபுலிங்கலீலை- பொறியிற்புறத்தாமனஞ்செல்லிற்புலனேதோன்றியிடுமகத்திற், செறியக்கரணம்பராநந்தசிவமே தோன்றுஞ்சிவந்தோன்ற, வறிவிற்பரந்தவிடயமயமாகுமுலகந்தோன்றுமற், பிறவித்துயரக்கடல்கடந்துபேரின்பஞ்சார்குவனொன்று. என்பதனானும். அவிரோதவுந்தியார் - நானற்றபோதத்தேநானை முத்தியைநானெங்ஙனஞ்சொல்வதுந்தீபற, நான்மறைக்கெட்டாதென்றுந்தீபற. என்பதனானும். திருப்போரூர்ச்சந்நிதிமுறை - அறிவினைநோக்கிலுயிர்வயமாகுமமனஞ்சகத்தையவ்வுயிர்தான், பிறிபடநோக்கின்மனத்திலின்வயமாம்பிறப்புமீதிதன்வயப்படாது, நெறியுறவறிவின்மிகப்பரிசிக்கினினைப்பறுங்கதியுமீதென்றான், பொறிமயிலேறுஞ்சேவகனெனையாள் போரிவாழாறுமாமுகனே. என்பதனானும். சொரூபசாரம்- ஆநந்தமென்பாரதீதமென்பார்நான்மறைக்குந், தாநந்தமாஞ்சர்வசாட்சியென்பார், ஞானநூல், சொன்னகுறிக்கெல்லாந்தொடாதவெவ்வடிவுக், கென்னகுறிசொல்லுவேன்யான். என்பதனானும். பாடுதுறை - உள்

ளதுபோதமென்றாதேடாகாளம், உலகமோக்கா ளமென்றாதேடாகாளம், வெள்ளவெளியிதென் றாதேடாகாளம், வேதஞ்சொன்னவண்ணமூதே டாகாளம். உணேமறிவதென்றாதேடாகாளம், உணர்வேபிரமமென்றாதேடாகாளம், நானேயவ னாமென்றாதேடாகாளம், நானாவதில்லையென்றா தேடாகாளம். என்பனவாலும். சகசபதிகம் - ப ற்றுடன்பற்றுப்பற்றுவான் பற்றப்படுபொருள்ப லவகைநசித்துச், சற்றுமோர்நிலையில் சகத்தினுக்கு ரியசகசபாம்பிணிப்பெனனசித்துச், சிற்றறிவற்று ச்சித்ததுவடிவாய்ச்சித்திற்களாதலுநசித்து, நற்ற வமவமாம்பிறிவறநசித்துநானெனனசிப்பதேநாட் டம். என்பதனாலும். பஞ்சீகரணசதுட்டயம்-கா துடன்கண்மூக்குநாப்பரிசமுதலைந்திற் கலந்திவை சேர்தொழிற்குரித்தாய்க்கண்டிருக்கும் பொருணா ன், வாதுறுநாற்கரணங்களொன்றினி லொன்றெ மூந்தேவருங்கருவிகட்கிடநான்வளர்கருவிகளு நா ன், போதெனநின்றெளிவிளக்கிப்போதருமுச்சு டராய்ப்பொருந்தவற்றின் காரணமாய்ப்பொலிந் திலங்குசுடர்நா, னேதுடனைத்திருந்திடினுமெவ் வகைக்குமுயிர்நானேகசிதாகாசமுநானெங்கு நி றைகுவனே. என்பதனாலும். பஞ்சீகரணக்கொத் துமணி - போதித்தவாக்கிய நெறிப்படியேதற்பத மும்புகலுந்தொம்பதமுமாம்வாச்சியார்த்தமென் னச், சாதிக்குஞ்சீவனுக்குமீசனுக்குமுள்ளசரீரமெ

ட்டினையுந்திரிசியமென்னவறிந்து, சோதிக்குநீப
ரப்பிரமசொரூபமதாய்ச்சுகமதுவாயிருவென்று
சொன்ன மொழிப்படியே, நேதித்தோர்ந்திடுவர்
நல்லோரிந்நூல்சாம்பவிப்பேர்நிகழ்த்துமுத்திரா
தீக்ஷைவிதிப்பிரகரணநெறியே. என்பதனாலும்.
சொரூபத்தந்தாதி - நயனமுமேகவடிவாஞ்சொ
ரூபத்தை நண்ணிநின்று, னயனஞ்செவிதொக்
குமூக்கெனுமிந்தியநாவினொடு, நயநண்சுழுத்தி
யவத்தைகனவினனவினுட, னயனம்பிறிவற்றிரு
க்குமெல்லாங்கண்டுநாட்டத்திலே. என்பதனாலும்.
பிரமதனுமாலை-கண்டாரெதிரற்றகாட்சியகோசர
ங்கற்பனையாற், கொண்டாடலற்றிடுதெய்வதநோ
க்கங்குறியில்குறி, யண்டாமலண்டினர்க்கானந்த
நல்குமயலமென்றுந், தண்டாநிலையமைம்பூதந்
தரிக்குந்தனுவதொன்றே. என்பதனாலும். உல
கமாலை பூதாதிநாதவணையானதத்துவப்போக்க
றிந்து, பாதாதியால்வரும்வாஞ்சைகடந்து மனத்
தைவென்று, பாதாதிகேசமுடிவாம்வடிவற்றபார்
வையுற்று, லேதாதியந்தமந்நோக்கிற்பொய்யாமி
வ்விகலுலகே. என்பதனாலும். சீவர்போதகக்க
ண்ணி - தேகாதிபொய்யாய்த்தெளிந்தறிவாகீரோ
சீவர்காளோ தன்னைத்தெரிசித்து மோட்சமுந் தா
னென்றறியீரோசீவர்காளோ, மோகாதிபாசமூ
லைதனைமாற்றீரோசீவர்காளோ சுத்தமோன சொ
ரூபமுநானென்றறியீரோசீவர்காளோ. என்பத

னும். சேயிழைக்கண்ணி சொன்னதுங்கே ளார்கள்சுட்டறகம்பாரு, மென்னதுங்கானரிவ் வேழைமையோர்சேயிழையே. என்பதனுனும். நிசாநந்தவுந்தியார் தானயிருந்ததலைமைப்பர ம்பொருளனயிருந்தேனென்றுந்தீபற, நன்று கப்பார்த்திடிலுந்தீபற. என்பதனுனும். சொ ரூபவுந்தியார் வானதியைம்பூதமாகியெவை களுந்தானகிநிற்பதென்றுந்தீபற, தான்சுகரூபி யென்றுந்தீபற. என்பதனுனும். ஞானவம்மா னை - பாராவறிவுநீயென்றன்காணம்மானைபாச மறியாமையென்றன்காணம்மானை, நேராயிர ண்டுநீயாகுமறிவாலே நில்லாநிலையாகி நில்லென் றனம்மானை. என்பதனுனும். வேதாந்தவம்மா னை - தானகாதெல்லாமுன்றள்ளினேனம்மானை தடையற்றபேரொளிதானனேனம்மானை, நான காதொன்றில்லைநானேகாணம்மானைநாட்டமென க்கயலோட்டமேதம்மானை. என்பதனுனும். மெ ய்ஞ்ஞானக்கும்மி - மோட்சரூபமுநாந்தாமேசு த்தமோனரூபமுநாந்தாமே, சூட்சரூபமுநாந்தா மேநிறைசூனியரூபமுநாந்தாமே. என்பதனுனு ம். நெஞ்சொடுகிளத்தல் - கோனமற்சிந்தைகு விந்தாய்கோதற்றமாமணியானய், கானமலுன் னைநீகண்டாய்கலக்கந்தவிர்ந்தனைநெஞ்சே. என் பதனுனும். இன்னுமிவ்வாறுவரும்பிறவற்றனுங் காண்க. இத்தேகமிருக்கும்போதேயடைவதாகி

யசீவன்முத்திக்குப்பிரமாணம். ஞானவாசிட்டம், செறியுமுடிச்சுமையமும்போய்ச் சீவன்முத்தர்சுபாவத்தால், வெறிதுவீடன்றியும் வீடுவினைந்தோவியத்தில்விளக்கொப்பான், பிறிவில்விண்ணில்வெறுங்குடம்போற் பிறிதும்புறனுட் சூனியமா, யெறியுங்கடலினிறைகுடம்போலெங்கும்புறனுணிறைந்திருப்பான். என்பதனானும். தேவிகாலோத்திரம் - நிருபாதிப்பரசிவந்தானிகழ்சடத்துவாக்கள், வருமாறுதோற்றிவித்தமாயையிரண்டருவா, யொருவாமலறுவகையினுட்புறம்பு முறல்போற், பெருஞானச்சீவன்முத்தர்பிறங்குவர்தீங்கறுத்தே. என்பதனானுங்காண்க. இச்சீவன்முத்தனே தேகாந்தத்திலடைவதாகிய விதேகமுத்திக்குப்பிரமாணம். ஞானவாசிட்டம் நிலையானவிச்சீவன்முத்தியை விட்டுடலிறந்தா னிறைந்தவாயு, வலையாமனிற்பதுபோலுடலிலாமுத்திபெறுமதனின்றன்மை, தொலையாதுமறையாதுதோன்றாது நணித்தல்லதூரத்தல்ல, வுலையாதுமுடியாதுநானல்லப்பிற னல்ல வொன்றுமல்ல. என்பதனானும். தேவிகாலோத்திரம் - உடம்புடனேயுபாயத்தால்விளங்கித்தோன்று முள்ளொளியாய்ப்பரசிவம்வந்துற்றபோதே, இடம்படவேசீவன்முத்தனாகும்விட்டாற்செல்லுமவன்பரமுத்திதன்னைச்சேர்வா, னிடம்படுமெய்ஞ் ஞான வுடல்வேண்டாமென்றே யிப்பொழுதுவலியவிடவெண்ணவேண்டாங், கட

ங்கொள்வினைதன்னளவுநின்றேயந்தக்காயமுமங்கு தன்பின்னேகழியுங்காணே. என்பதனானும். நவநீதகைவல்லியம் - கடமெனுமுபாதிபோனாற்ககனமொன்றானாற்போல, வுடலெனுமுபாதிபோனவுத்தரஞ்சீவன்முத்த,ரடிநடுமுடிவுமின்றியகம்புறமின்றிநின்ற, படிதிகழ்விதேகமுத்திப்பதமடைந்திருப்பனொன்றும். என்பதனானுங்காண்க. இச்செய்யுளால்வேதாகமாதிகளிற்கூறும் பிரமாணமெட்டனுட் காட்சிப்பிரமாணமுன்னிலையிற் புருடார்த்தங்கூறியவாறுணர்க ............................(௧)

அனுமானப்பிரமாணந்தனிலேதுமுதலாமவை....
மூன்றிலேதுபுகையாலனலுண்டெனல்போற்*
கனகாரியச்சகமுண்டாயிருக்குமதனாற்..........
காரணவத்துண்டெனநிச்சயித்தல்பிரதிக்ஞை*
துனுமசலத்தங்கியுண்டென்பதுபோலாமோபந்...
தோற்றிவிக்குஞ்சித்தந்தப்பொருளிலுண்டென்றோர்த*
லுனுதிட்டாந்தம்மடைப்பளியிலனலுண்டெனல்போ.
லுறுசகஞ்சித்தன்றியலாதானன்குத்திரியெனலே*

(இ—ள்.) அனுமானப்பிரமாணந்தனில் அனுமானமாகியபிரமாணத்தினுள்ளே—ஏதுமுதலாமவைமூன்றில் ஏதுபிரதிக்ஞைதிட்டாந்தமாகியவிம்மூன்றனுள்ளும்—ஏது - ஏதுவாவதியாதெனில்—புகையாலனலுண்டெனல்போல் - காரியமாகிய புகையைக்கண்டதற்குக்காரணமாகிய நெருப்

புண்டென்றறிவதுபோல—கனகாரியச்சகமுண்டா யிருக்குமதனால் - மகாகாரியமாகியவுலகமுண்டா யிருக்குந்தன்மையினால்— காரணவத்துண்டென நிச்சயித்தல் - இதற்குக்காரணமாகியவோர்பொருளுண்டென்று நிச்சயம்பண்ணுதலாம் — பிரதிக்ஞை-பிரதிக்ஞையாவதியாதெனில்— துனுமசலத்தங்கியுண்டென்பதுபோல்-பொருத்தமாகியபருப்பதத்திலக்கினியுண்டென்றறிவதுபோல—ஆரோபந்தோற்றுவிக்குஞ்சித்து - ஆரோபமாகியசகத்துதோன்றியசையப்பண்ணுஞ் சைதன்னியம்— அந்தப்பொருளிலுண்டென்றோர்தல் - அந்தச்சகத்திலந்தர்ப்பூதமா யிருக்குமென்றறிதலாம் — உனுதிட்டாந்தம் - மதிக்கத்தக்கதிட்டாந்தமாவதியாதெனில்—மடைப்பளியிலனலுண்டெனல்போல்-அடுக்களையிற்பாககாரணமாகிய வக்கினியுண்டென்பதுபோல—உறுசகம் - தோன்றியழியுந்தன்மைபொருந்தியவிவ்வுலகம் — சித்தன்றியலாது - அத்தன்மைக்குக்காரணமாகிய நித்தியசேதனனையல்லாமணடவாதாகையால்—உளன்சூத்திரியெனலே - இவ்வகைவுக்குக்காரணமாகியசூத்திரதாரி யொருவனுளனென்றறிதலாமென்றவாறு. சித்தன்றியென்பதுசெய்யுளாதலால் - சித்தன்றெனவுகரமாய்த்திரிந்து நின்றது. இங்ஙனங்காரியங்கண்டு காரணமுண்டென்பதற்குப்பிரமாணம். ஒழிவிலொடுக்கம்-டெண்றுணையியாய்ப்பிறந்துவளர்ந்தேநயழியு, மெண்

னாதபேதமியல்பின்றிப், பண்ணுங்காற், காரணகர்த்தாவொருவனுண்டவனைக்காட்டுநூ, லாரணமுமாகமமுமாம். என்பதனாற்காண்க. இச்செய்யுளாலனுமானப்பிரமாணமுன்னிலையிற்புருடார்த்தங்கூறியவாறுணர்க.........................(௨)

உவமானப்பிரமாணந்தன்னையெடுத்துரைக்கி.....
லோதுகின்றமரைபசுவையொத்திருக்குமெனல்போ*
லவமாகச்செயல்பற்றுமனத்தின்கற்பனைக........
ளற்றிருக்குஞ்சுழுத்தியினிலாநந்தமென்ன....*
நவந்தொன்மையிரண்டுமிலாதவித்தையினைக்கடந்த,
ஞானமாய்நிரதிசயநாட்டசுகமான...........*
தவமாகும்பிரமவாநந்தமொன்றுண்டென்று.....
சந்தேகமறத்துணிவுதனைக்கோடலாமே......*

(இ—ள்.) உவமானப்பிரமாணந்தன்னையெடுத்துரைக்கில் - உவமானமாகியபிரமாணத்தையெடுத்துக்கூறுமிடத்தில்—ஓதுகின்றமரைபசுவையொத்திருக்குமெனல்போல் - சொல்லாநின்றமரையானதிப்பசுவைப்போலிருக்குமென்றுவமானத்தாற்காட்டுவதுபோல— அவமாகச்செயல்பற்றும்-வீணாகவுலகத்தொழிலைப்பற்றியலையும்—மனத்தின்கற்பனைகளற்றிருக்கும்-மனோகற்பிதபாவனைகளெல்லாமொழிந்திருக்கின்ற—சுழுத்தியினிலாநந்தமென்ன - அஞ்ஞானமயமாகிய சுழுத்தியினிலனுபவிக்குமாநந்தம்போல— நவந்தொன்மையிரண்டுமி

லாது - புதுமைபழமையாகியவிரண்டுதன்மையுமில்லாமல்— அவித்தையினைக்கடந்தஞானமாய் - அம்மறப்பைக்கடந்தவறிவுமயமாய்— நிரதிசயநாட்டசுகமான - எதிரீடற்றநோக்கத்தாலுண்டாகுமாநந்தமான— தவமாகும்பிரமவாநந்தமொன்றுண்டென்று - மிகுதியானபிரமாநந்தமொன்றிருக்கின்றதென்று — சந்தேகமறத்துணிவுதனைக்கோடலாமே - சந்தேகமில்லாமனிச்சயித்தறிந்துகொள்வதாமென்றவாறு. ஈண்டித்தவமாகும்பிரமவாநந்தமென்பதற்கு - தவத்திலுண்டாகும்பிரமவாநந்தமெனக்கூறினுமமையும். பிரமவாநந்தமென்பது- இயோகரூடியாதலாற்சுழுத்தியாநந்தமெனக்கொள்ளாது வித்தியாநந்தமெனப்பொருளுரைத்துக்கொள்க. — இச்சுழுத்தியாநந்தம்போற் பிரமாநந்தமொன்றுண்டென்பதற்குப் பிரமாணம்.

ஒழிவிலொடுக்கம் - வெற்றவெறுமாநந்தமேலீடே
கேவலத்தி, னிற்பதுபோலந்தநிலைகழன்றோர், சி
ற்போத, வண்டங்கடந்த வமுதத்தினோ டுலவும்,
வெண்டிங்களுங்கிரணமும். என்பதனாற்காண்க.

பிரமவாநந்தத்திற்குதாரணம். சகசபதிகம் - பின்னியபஞ்சகோசவாதனைபோய்ப் பிரமமாநினைவினதென்னப், பன்னியவதுவுங்கடந்து நிற்குணமாய்ப்பதிபசுபாசமுமிறந்து, மன்னியசுடராய்த்தேங்கியெங்குமாய்மனமதுபற்றுதலொழிந்தே, யன்னியமெனல்போய்நிரதிசயமதாம சஞ்சலவறிவ

தாநந்தம். என்பதனாற்காண்க. இச்செய்யுளானுவ
மானப்பிரமாணமுன்னிலையிற்புருடார்த்தங்கூறிய
வாறுணர்க.......................................(௫)

சத்தமாம்பிரமாணந்தனைச்சொலி...............*
லொத்தவாத்தன்வசனத்துறுதிபோற்............*
சுத்தவாக்கியஞ்சொல்பரமுண்டென..............*
மெய்த்தநம்பிக்கைமேவுதலாமரோ...... .......*

(இ—ள்.) சத்தமாம்பிரமாணந்தனைச்சொலில் சத்தத்தானுணரும் பிரமாணத்தையெடுத்துக்கூறுமிடத்தில்—ஒத்தவாத்தன்வசனத்துறுதிபோல் ஒருமைப்பாடாகியவாத்தனதுவசனத்தின் கணிச்சயவுணர்ச்சிகொள்வதுபோல — சுத்தவாக்கியஞ்சொல்பரமுண்டென - காருண்ணியத்தாற்பரமதேவனருளிச்செய்தவேதாகமங்களாகிய பரிசுத்தவாக்கியத்தாற்கூறப்படும் பரம்பொருளொன்றுண்டென்று—மெய்த்தநம்பிக்கைமேவுதலாமரோ - மெய்யாகியதிடநிச்சயங்கொண்டுணர்தலாமென்றவாறு. இங்ஙனங்கூறியசத்தமாகியபோட்சஞானத்தாலபோட்சஞானஞ்சித்திக்குமாகலின் நம்பிக்கைமேவுதலென்றுகூறப்பட்டது. சுத்தவாக்கியஞ்சொல்பரமுண்டெனமெய்த்தநம்பிக்கைமேவுதற்குப்பிரமாணம். ஞானவாசிட்டம் - ஒல்லும்வகையுரையென்னவிராகவன்கேட்டலும்வசிட்டனுத்தரிப்பா, னல்லவுபதேசந்தானம்பிக்கைமாத்திரத்தைநன்றுச்

செய்த, வெல்லையிலாவறிவுக்குச் சுத்தமாமன துரு
வமேதுவென்று, சொல்லுதலுமீண்டந்த முனிவ
னுக்குராகுநாதன் சொல்லுகிற்பான். என்பதனாற்
காண்க. அரோவென்பதசை. இச்செய்யுளாற்சத்
தப்பிரமாண முன்னிலையிற்புருடார்த்தங்கூறியவா
றுணர்க.....................................(௪)

அருத்தாபத்திப்பிரமாண.............................
மறையிற்றிட்டஞ்சுருதியிரண்.....................
டாகுமிவற்றிற்றிட்டந்தா..........................
னரியநித்தவுபவாசி..............................*
பருத்தவுடல் கண்டொளித்துண்ணும்....................
பான்மைதெரிந்ததெனநித்த.........................
பரிபூரணசத்தையிற்றோன்றும்........................
பரந்தசகத்தாருட்டியங்கண்........................*
பெருக்காரணமாஞ்சிற்சத்தி...........................
யூற்றம்விவர்த்தமாக்கொளுமென்.....................
றோர்தல்சுருதிதேவதத்த..........................
னுறையுங்கிரகத்தில்லையென்று....................*
லிருக்குமிடம்வேறென்றறிந்தாங்.......................
கிந்தச்சகத்திற்பிரமமிலை..........................
யென்றுற்சகக்கற்பிதமுடிவி.........................
லிருக்கும்பிரமமெனக்கொளலே......................*

(இ—ள்.) அருத்தாபத்திப்பிரமாணமறையில் - அ
ருத்தாபத்தியாகிய பிரமாணத்தையெடுத்துக்கூறு

மிடத்தில்—இட்டஞ்சுருதியிரண்டாகும் - இட்டவ
ருத்தாபத்தியென்றுஞ்சுருதியருத்தாபத்தி யென்
றுமிரண்டுவகைப்படும் — இவற்றிற்றிட்டந்தான்
இவ்விருவகையிற்றிட்டவருத்தாபத்தியாவதியாதெ
னில்—அரியநித்தவுபவாசிபருத்தவுடல்கண்டு - உ
ணகத்திற்கருமையாய்க்காட்டு நித்தியவுபவாசியின
துதேகபீனத்துவங்கண்டு— ஒளித்துண்ணும்பான்
மைதெரிந்ததென - அவனந்தரங்கத்திற்புசிக்கின்
றானென்றுந்தன்மையையறிவதுபோலும் — நித்
தபரிபூரணசத்தையிற்றோன்றும் - சத்தாமாத்திர
மாகிய நித்தியபரிபூரணவத்துவிற்றோற்றமாத்திர
மாய்க்காண்பிக்கும்—பரந்தசகத்தாருட்டியங்கண்
டு - விரிந்திருக்கின்றசகத்தினது பரிமிதத்தைக்க
ண்டு—உருக்காரணமாஞ்சிற்சத்திபூற்றம் - இவ்வுரு
வத்திற்குக்காரணமாகியசிற்சத்தியினதிடத்தை—
விவர்த்தமாக்கொளுமென்றோர்தல் - ஆய்பரிண
மபக்கமாகக்கொள்ளாது விவர்த்தபக்கமாகக்கொ
ள்ளப்படுமென்றறிந்துகோடலாம்—சுருதி - சுருதி
யருத்தாபத்தியாவதியாதெனில்—தேவதத்தனுறை
யுங்கிரகத்திலில்லையென்றால்-தேவதத்தனாகியவோர்பு
ருடனவன் வசிக்குமனையிலில்லையென்று சொல்லப்
பட்டால்—இருக்குமிடம்வேறென்றறிந்தாங்கு-அ
ன்னியத்தானத்திலிருப்பானென்றறிவதுபோல—
இந்தச்சகத்திற்பிரமமிலையென்றால் - இந்தச்சகத்
தோற்றத்தின்கண்பிரமத்தோற்றமில்லையென்றுகூற

ப்பட்டால்—சகக்கற்பிதமுடிவிலிருக்கும்பிரமமெ
னக்கொளலே-இச்சகத்தாகியகற்பிதத்தோற்றந்தோ
ன்றாதடங்கியமுடிவிற்றானகியபிரமத்தோற்றம் வி
ளங்குமென்றறிந்துகொள்ளுதலாமென்றவாறு.—
இப்பிரமத்திற்சககாரியந்தோற்றுவது தந்தையிட
த்துமகன்போலாரம்பமுமன்றிப் பாலினிடத்திற்ற
யிர்போற்பரிணாமமுமன்றிப்பழுதையினிடத்துப்
பாம்புபோல்விவர்த்தமாகக்கொள்ளவேண்டு
மெனக்கருதிவிவர்த்தமாக்கொளுமென்றுகூறப்ப
ட்டது. இங்ஙனமுருக்காரணமாஞ்சிற்சத்திபூற்ற
ம்விவர்த்தமாக்கொளுமென்பதற்குப் பிரமாணம்.
ஞானவாசிட்டம் - கரசரணமுதலங்கமுதலாச்செ
ய்யுங்கருமபலமுளதாய்க்கையாளுங்காயங், குரவ
விலதெனும்படியெனனெனக்கும்பன் கூறுவா
ன்காரணத்தைக்கூடாதென்னில், விரவியகாரியந்
தானுமிலதாமந்தவேதனமுமயக்கமுமே மிகுமய
க்கால், வருவனவெல்லாமிலதாயேதுவன்றி வரும்
பொருள்பொய்யாங்கயிற்றில்வருநாகம்போல். எ
ன்பதனாற்காண்க. சகக்கற்பிதமுடிவிலிருக்கும்பி
ரமமென்பதற்குப்பிரமாணம். ஞானவாசிட்டம்
மண்டியசமுத்திதன்னில்வருகளைப்போவதென்ன
க், கண்டனவுலகமெல்லாங்கற்பனைமுடிவிற்போக,
வெண்டருமலைவுதோற்றம் பெயரெலாமின்றியாழ்
ந்து, தண்டலிலிருடேசின்றித் தனித்தோருண்
மைநிற்கும். என்பதனாலும், சகசபதிகம் கா

ணுதல் கேட்கப்படலெனலற்றுக் களங்கமற்றகளங் கமற்று, வாணுதன்மடவார்முதலியவாசைவகுப்பற்றுநிராசையுமற்றுக், கோணுதலொழுக்கக்குறிகளுமற்றுக்கோசரத்தொடர்ச்சியுமற்றுப், பேணுதலெதிராற்றகண்டபூரணமாய்ப்பேச்சிறந்திருப்பதே பிரமம். என்பதனுணுங்காண்க. ஆங்கென்றதுவமைச்சொல். இச்செய்யுளாலருத்தாபத்திப்பிரமாணமுன்னிலையிற்புருடார்த்தங்கூறியவாறுணர்க (௫)

அபாவவளவைமுன்னின்மை......................
யாதிநான்கின்முன்னின்மை....................
யறையிற்றந்தாதியிலறுவை....................
யாதிமுன்னிலாமையென.....................*
விபாகசகக்கற்பிதஞ்சத்தாம்....................
விளக்கத்திலைமுன்னென்றோர்தல்...............
வீழ்பின்னின்மைபடமாதி......................
விதம்பின்னில்லாமையைமான...............*
வுபாதியுலகாய்ந்ததன்பினிலை...................
யுளதேயுளதென்றறிதலொன்றி.................
லொன்றபாவங்கடபடத்தி.....................
லொன்றிலொன்றின்மையதொப்பச்..........*
சுபாவமொடுகற்பிதத்தோற்றந்...................
துலங்கலத்தியந்தாபாவஞ்....................
சொலும்விண்பூப்போற்சகமிலென்றுந்.........
தொன்மைப்பரமேயுளதெனவே.............*

(இ—ள்.) அபாவவளவை - அபாவப்பிரமாணத்தை

யெடுத்துக்கூறுமிடத்தில்---முன்னின்மையாதி நா
ன்கில் - பிராகபாவம், பிரத்தொங்சாபாவம், அன்
னியோன்னியாபாவம், அத்தியந்தாபாவம், ஆகிய
நான்கினுள்ளும்—முன்னின்மையறையில் - பிரா
கபாவத்தையெடுத்துக்கூறுமிடத்தில்— தந்தாதியி
லறுவையாதிமுன்னிலாமையென - நூன்முதலா
கியகாரணப்பொருளிலாடைமுதலியகாரியப்பொ
ருளக்காரியவிளைவுக்குமுன்னில்லாததுபோல— வி
பாகசகக்கற்பிதம் - வேறுபட்டசகத்தாகிய காரிய
கற்பனை — சத்தாம்விளக்கத்திலைமுன்னென்றோர்
தல் - இக்காரியத்திற்குமுன்புசத்தாய் விளங்குகின்
றகாலத்தில்லையென்றறிதலாம்— வீழ்பின்னின்மை-
ஒழியத்தக்கபிரத்தொங்சாபாவத்தையெடுத்துக்கூ
றுமிடத்தில் — படமாதிவிதம்பின்னில்லாமையை
மான ஆடையாதியகாரியப்பொருள்களக்காரிய
நட்டத்தின்பின்பில்லாததுபோல --- உபாதியுலகா
யிந்ததன்பினிலை - காரியோபாதியாகிய சகத்தோ
ற்றஞ் சத்தையன்றிவிளங்காதென்றறிந்தச்சத்தில் ல
யப்படக்கண்டதன்பின்பவ்வுலகமில்லை— உளதேயு
ளதென்றறிதல் - என்றைக்குமிருந்தவாறிருக்குஞ்ச
த்தேயுளதென்றறிந்துகோடலாம்— ஒன்றிலொன்
றபாவம் - அன்னியோன்னியாபாவத்தை யெடுத்
துக்கூறுமிடத்தில்— கடபடத்திலொன்றிலொன்றி
ன்மையதொப்ப - கடமும்படமுமாகியவிருவகை
ப்பொருளினுமோர்பொருளைநோக்குங்கான் மற்

ரோர்பொருளில்லாததுபோல—சுபாவமொடுகற்
பிதத்தோற்றந்துலங்கல் - சுபாவமாகியசத்தாமாத்
திரப்பொருள்விளங்குங்காலத்திற்கற்பிதசகத்துவி
ளங்காமையுமக்கற்பிதமாகியசகத்துவிளங்குங் கா
லத்திற்சுபாவமாகியசத்தாமாத்திரப்பொருள் விள
ங்காமையுமாகும்—அத்தியந்தாபாவம் - அத்தியந்
தாபாவத்தையெடுத்துக்கூறுமிடத்தில்—சொலும்
விண்பூப்போல் - காலத்திரயத்திலுமில்லையென்று
கூறுங்ககனகுசுமம்போல —சகமிலென்றுந்தொ
ன்மைப்பரமேயுளதெனவே - எக்காலத்துஞ்சகத்தி
ல்லையேயில்லையென்றைக்கு மொருதன்மையாகிய
பழைமையானபரப்பொருளேயிருந்தவாறிருக்கி
ன்றதென்றுகூறுதலாமென்றவாறு. இச்சகத்து
காலத்திரயத்திலுமில்லையென்று துணிவுவந்தில்லா
மையானவிடத்திலிச்சகத்தைப்பற்றிய சீவனுமில்
லாமையாகியத்தொய்தஞ்சித்தித்தலினபாவநான்
கினுமத்தியந்தாபாவமேமுக்கியம். இவ்வபாவத்
திரத்தின்பொருட்டேமற்றைமூன்றபாவமும்போ
ந்ததென்றறிக. இவ்வபாவநான்கனுண்முன்னின்
மைக்குப்பிரமாணம். ஞானவாசிட்டம் - என்றனு
மேயாதிமுதலுள்ளவேதா வியற்றியபல்படைப்பா
குமிந்தஞால, நின்றவவனிதற்குக்காரணமல்லாத
நெறியேதென்றலுங்கும்பனிகழ்த்துகிற்பான், று
ன்றுசிருட்டியின்முன்புவெறிதாய்ச்சாற்றுந்தொட
ர்பிரமமேயுளதாய்த்துலங்குமத்த, வொன்றெழுபி

யவிரண்டில்லா வகாரணத்தாலுயர்வேதாகாரணத் தையுருவென்றேத. என்பதனாலும். பின்னின்மைக்குப்பிரமாணம். ஞானவாசிட்டம் - அயனொடுமால்சங்கரனுஞ் சதாசிவனுமிந்திரனுமருக்கன்றனும், வியனிலுபசாந்தியாம் வேலைபடிந்து பாதமெலாம்விட்டுநீங்கிப், பயனில்சகமென்கின்றபற்றகன்றுசின்மயமாம்பரமரூபத், துயர்விகற்பமிலாவடிவாயோங்குகின்றசிவமாகியொன்றாய் நிற்கும். என்பதனாலும். ஒன்றிலொன்றின்மைக்குப்பிரமாணம். ஞானவாசிட்டம் - பந்தத்துருவங்கெட்டுணர்ந்தபரவீட்டுருவமேல்வெளியா, மிந்தச்சகநீநான்முதலாமிவைமெய் யென்றல்பந்தமதா, மந்தக்கருத்தறநிற்பளவுமரிதாமுத்திவித்தினிடை, தொந்தத்தருப்போற்காண்பவர் பாற்றோன்றதுறையுங்காண்பவெல்லாம். என்பதனாலும். அத்தியந்தாபாவத்திற்குப் பிரமாணம். ஞானவாசிட்டம் - ஞானவின்னையைக்கேவலமாய்நடுவுமுடிவுமுதலிலா, தானசுயம்புவாம்பிரமமெத்தகருமவசத்தாலே, மானவுருவமுடையதுபோன்மன்னுபுமான்போல்வயங்கிடுமா, லீனமுலடிமகன்போல விதுமெய்ம்மையினல்வடிவிலதாம். என்பதனாலும். நவநீதகைவல்லியம் - கானனீர்கிளிஞ்சில்வெள்ளிகந்தர்ப்பநகர்களைவூர், வானமைகயிற்றின்பாம்புமலடிசேய்முயலின்கோடு, ஏனமாந்தறிபுமானிப்பிரவஞ்சமெல்லாம்பொய்யே, ஞானமெய்மகனே

யுன்னை நம்மானை மறந்திடாதே. என்பதனும்.
சகசபதிகம் - உருப்படுதறியிற்களன்கயிற்றரவமு
வட்டெடுத்தோடுகானலினீர், கருப்பயின்மனரா
ச்சியநகர் விண்ணிற்கரிபரிமணற்குவான்முயலின்,
மருப்பொடுபரியின்கோடெனமேலோர் வகுக்கு
மிவ்வையகமென்னும், விருப்பொடுவெறுப்பாம்
பொருளெலாமாயாவித்தையென்றறிவதே விவேக
ம். என்பதனுனுங்காண்க. இச்செய்யுளாலபாவப்
பிரமாணமுன்னிலையிற் புருடார்த்தங் கூறியவாறு
ணர்க..................................... (சா)

சம்பவவளவையைச்சாற்றுங்காலையி............*
லிம்பரிலாயிரத்திருகுநூறெனப் ...........*
பம்பியபூரணபரமலாதிலை....................*
வெம்புகற்பிதசகவிதமென்றோர்தலே.........*

(இ—ள்.) சம்பவவளவையைச்சாற்றுங்காலையில்
சம்பவப்பிரமாணத்தையெடுத்துக்கூறுமிடத்தில்—
இம்பரில் - இவ்வுலகத்தின்கண்—ஆயிரத்திருக்குநூ
றென - ஆயிரமென்னுந்தொகையையன்றி நூறெ
ன்னுந்தொகை வேறுபட்டில்லாமலதனுளடங்கிய
துவாயிருப்பதுபோல—பம்பியபூரணபரமலாது-
எங்கணுநிறைந்த பரிபூரணசிவத்தை யல்லாமல்—
வெம்புகற்பிதசகவிதம் - தாபத்திரயவெட்பத்தைத்
தருதற்கேதுவாகியசகபேதங்களெல்லாம் — இலை
யென்றோர்தலே - வேறுபட்டில்லையதுவதுவாயிரு

க்கின்றதென்றறிதலா மென்றவாறு. இலையென்ப தைச்சகவிதமென்பதனோடுகூட்டுக. பூரணபரம லாதிலையெய்புகற்பிதசகமென்பதற்குப்பிரமாணம். ஞானவாசிட்டம் - பன்னுகாரணமொன்றில்லைப்ப டைக்குமுன்படைக்கவேண்டு, மென்னும்பேரவையி னேற்றமேயினையந்தகாரணமதாகி, முன்னுறுபொ துவாங்காட்சிமொய்பொருட்டிாள்களாகித், தன் னுளேசகடாய்க்காற்றுட்சலனம்போலறிவுட்டங்கு ம். என்பதனாற்காண்க. இச்செய்யுளாற்சம்பவப் பிரமாணமுன்னிலையிற் புருடார்த்தங் கூறியவாறு ணர்க. ........................................ (எ)

ஐதிகஞ்சொற்றிடிலமர்மரத்தினிற். ............... *
கைதவப்பேய்நிலைகழறக்காண்டல்போ ......... *
மெய்திடுபிரமமுண்டெனும்பரோட்சங்கொள் *
செய்தியாற்காட்சிசித்தித்தலாகுமே ............ *

(இ—ள்.) ஐதிகஞ்சொற்றிடில் - ஐதிகப்பிரமாணத் தைபெடுத்துக்கூறுமிடத்தில்—அமர்மரத்தினில் மார்க்கத்தமைந்தவோர்விருக்கத்தின்கண்— கைத வப்பேய்நிலைகழற - துன்பத்துக்கேதுவாகியபே யினிருப்பையோர்புருடன்வந்துகூற— காண்டல் போல் - அதனலப்பேயைப்பிரத்தியக்கமாகக்க ண்டதுபோல — எய்திடுபிரமமுண்டெனும்பரோ ட்சங்கொள்செய்தியால் - முமுட்சுவானவர்கள டையத்தக்கபரமவின்பப்பொருளொன்றுண்டெ

ன்றோர்குறமுன்னிலையிற்கேட்கும் பரோட்சஞா
னத்திடவுணர்ச்சிச்செயலின்றே—காட்சிசித்தித்த
லாகுமே - அபரோட்சஞானஞ்சித்தித்தலாமென்
றவாறு. பரோட்சஞானத்தாலபரோட்சஞானங்கி
டைப்பதுசாதனசாத்தியமுறை. இதற்குப்பிரமா
ணம். நவநீதகைவல்லியம் - பிரமரூபத்தைத்தி
யானித்தபேர்களும்பிரமமாகுவரென்று, னரசரீ
ரமாங்குவனேவிசாரமேஞானமேனென்றே,
பரமபாவனைபரோட்சமாம்பின்பநந்தபரோட்ச
மேயபரோட்சந், நிர்விசாரமாஞானமாமுத்திடா
ந்தீர்வையீதறிவாயே. என்பதனாற்காண்க. இச்
செய்யுளாலேதிகப்பிரமாணமுன்னிலையிற் புருடார்
த்தங்கூறியவாறுணர்க.......................(அ)

௯ இதுகாறுங்கூறியவளவைகளுக்கெல்லாம்பிர
மாணம். உபநிடதம் - உற்றெதிரேகாண்டல்பிரத்
தியக்கமனுமானம் மோங்குபுகைகண்டுநெருப்புண்
டெனவேயுணர்தன், மற்றுவமைமரைபசுப்போலெ
ன்னல்சத்தம் பெரியோர்வாட்சொலருத்தாபத்தி
மதத்தவுடலதனு, வற்றவுபவாசியொளித்துண்பா
னென்றுணர்தலபாவமுன்பின்னிடையொருகாலத்
துமிலையெனறு, னற்றவிம்மரத்தினிற்பேயுண்டெ
னலேதிகநாட்டுதல்சம்பாவம்பிரமாணமெட்டாய் ந
விலும். என்பதனாற்காண்க.

ஓதுசிரவணஞ்சகலவேதாந்தநூல்களுக்கு.........
மோராறென்னைப்....... ...................... *

போதுகின்றவிலிங்கத்தாற்பரப்பிரம..............
சொரூபமெனப்புகலான்மாவி ............ *
லாதரமாந்தாத்பரியமெனும்புத்திநிச்சயமே.. ...
யதன்பலன்று......................... *
னேதமில்சாத்திரசிரவணைச்செயல்கொண்டு..... ...
சமுசயங்களிகத்தலாமே.................. *

(இ — ள்.) ஓதுசிரவணம் - சுருதிகளாற்கூறப்படுஞ்சிரவணமாயதியாதெனில் — சகலவேதாந்தநூல்களுக்கும் வேதாந்தசாத்திரங்களெல்லாவற்றிற்கும் — ஓறென்னப்போதுகின்றவிலிங்கத்தால் வழங்கிவருகின்ற வாராறுவகையாகிய லிங்கங்களால — பரப்பிரமசொரூபமெனப்புகலான்மாவில் - பரப்பிரமசொரூபமென்றுகூறும்பிரத்தியேகாத்துமாவினிடத்தில — ஆதரமாந்தாத்பர்யமெனும்புத்திநிச்சயமே - ஆதரிப்பதாகியதாத்பரியார்த்தமென்றுகூறப்படுமேனுநிச்சயமாகும் — அதன்பலன்றான் - அதனாலுண்டாகும்பயனைக்கூறுமிடத்தில் — ஏதமில்சாத்திரசிரவணைச்செயல்கொண்டு குற்றமற்றசாத்திரங்களினுடையகேள்விச்செய்கையைத்திடமாகக்கொண்டு — சமுசயங்களிகத்தலாமே சகலசந்தேகமும்விட்டொழிதலாமென்றவாறு. எனவேசந்தேகமொழியுமட்டுஞ்சிரவணம்வேண்டுமென்பதாயிற்று. இச்சிரவணத்திற்குப்பிரமாணம். ஞானவாசிட்டம் - நிறையறிவின்சமமானநோக்கினார்சேவித்துநிரந்தரித்துப்,

பொறையுடனேவினவினான்முத்தி பெறுநுண்ணறிவுபொருந்துமென்று, மறையவன்போதத்தனுமேகண்கணீர்சொரிந்திரங்கிமன்னன்சொல்வான், னிறையவனே யறப்புதுமை யுன்றனாலே யுணர்வுற்றேனேழையானேன். என்பதனுற்காண்க. இச்செய்யுளாற்சிரவணமுஞ்சிரவணப்பயனுங் கூறியவாறுணர்க.......................................(சுய)

மனனமாவதுவேதம்வகுத்தபொருள்கேட்டதன்பின் *
னினியபொருட்கேகத்தாலேகவாக்கியம்பண்ணித் *
தனிமையுறச்சிந்தித்தல்சாற்றுமதன்பலன்வினவி *
னனிமலினங்கொளுமசம்பாவனைதீரு நலனுறலே *

(இ—ள்.) மனனமாவது - மனனமென்றுகூறப்படுவதியாதெனில்—வேதம்வகுத்தபொருள் கேட்டதன்பின் - வேதங்களாற்கூறப்படும்பொருளை யத்தன்மைத்தெனக்கேட்டதன்பின்பு— இனியபொருட்கு - அந்தநித்தியாநந்தப்பொருளுக்கு— ஏகத்தாலேகவாக்கியம்பண்ணி - தனதுயுத்தியினாலேயொருவாக்கியப்பொருளாய்முடித்து— தனிமையுறச்சிந்தித்தல் - ஏகாந்தத்திலிருந்து மனனஞ்செய்தலாம் — சாற்றுமதன்பலன்வினவில் - சொல்லாநின்றவம்மனனத்தினதுபயனை விசாரிக்குமிடத்தில்— நனிமலினங்கொளும் - மிகவுங்குற்றமமைந்திருக்கின்ற—அசம்பாவனைதீரும் - அசம்பாவனையொழிவதாகிய— நலனுறலே- நன்மை

யமைவதாமென்றவாறு. அசம்பவம்-வாராதுவருதல். இம்மனனத்திற்குப்பிரமாணம். பிரபுலிங்கலீலை - ஆசுதீர்ந்தபனத்தினிடையன்றியுணர்வுதோன்றுது, மாசுதீர்ந்தவாடியிடையன்றிவதனந்தோன்றுமோ, பாசநீங்குபரஞ்சுடரைநினைக்குநினைவாற்பற்றுமனங், காசநீங்குகண்போலத்தன்னைக்காணவிளங்குமால். என்பதுகாண்க. இச்செய்யுளான்மனனமுமனனப்பட்டதுங் கூறியவாறுணர்க ............ (௰)

நிருத்தியாசனஞ்சொலில்வி ....................
சாதிகமாங்காமாதிநிகழ்ச்சிநீத்துப் ......... *
பொருந்துசுசாதிகமான ........................
வகம்பிரமமகம்பிரமமெனும்புலத்தி ........*
னிருந்தநிந்தாசிந்தையமர்ந்திருத்த ...........
லதன்பயன்றானறையுங்காலைத் ............ *
திருத்தமிலாவிபரீதபாவனைபோய் ...............
மெய்க்காட்சிதெரிதலாமே .................. *

(இ—ள்.) நிருத்தியாசனஞ்சொலில் - நிருத்தியாசனத்தையெடுத்துக்கூறுமிடத்தில்— விசாதிகமாங்காமாதிநிகழ்ச்சிநீத்து - மாயாசம்பந்தப்பட்ட வேறுசாதியாகியகாமமுதலானவுட்பகையியக்கத்தையொழித்து—பொருந்துசுசாதிகமான - ஆத்துமசம்பந்தமாய்ப்பொருந்துஞ்சுசாதிகமாய்விளங்குகின்ற — அகம்பிரமமகம்பிரமமெனும்புலத்தி

ணருத்தம் - நானேபிரமநானேபிரமமென்றுகூறு மறிவினருத்தமே— நிரந்தரசிந்தையமர்ந்திருத்தல் - உள்ளத்தின்கணிடைவிடாமற்சிந்தனையையவு பெற்றிருத்தலாம் — அதன்பலன்றனைமறையுங்காலை - அதனுண்டாகும்பிரயோசனத்தைக்கூறுமிடத்தில்— அருத்தமிலாவிபரீதபாவனைபோய் - தகுதியில்லாதவிபரீதபாவனையொழிந்து— மெய்க்காட்சிதெரிசனமே - உண்மையானமெய்யுணர்ச்சி விளங்கலுமென்றவாறு. சீவனுமீசனுமாகியபேதத்தைப்பற்றி யகம்பிரம மகம்பிரமமெனவிக்கு மொழிகூறியதாம். விபரீதபாவனை - ஒன்றை மற்றொன்றாகப்பாவித்தல். இர்நிருத்தியாசனத்திற்குப்பிரமாணம். தேவிகலோத்திரம் - நித்திலையும்பாக்கினையுநீக்கச்சித்தமாருநிலையுநீங்காமனிறுத்திக்கொண்டார், சித்தமொரு பொருளினையுஞ்சேராதாகச்சேருவனசேராமற்செல்லனின்று, மத்தமனமுதலானவத்தை யொன்று மருவாதவகைநிற்குமதுவேயாகு, முத்திநெறியென்று மறையிடைவிடாதுமுறையிடவுமாகமங்கண் மொழியுங்காணே. பொருண்முழுதுமடையாமல்மனத்தைவாங்கி நெஞ்சகத்தேபொருந்துவித்தபொழுதேதோன்று, மருளாறுநன்ஞானவொளியதுவிளங்கவெப்போதும் வாதனையே யியற்றிக்கொள்க, பரமதுவாயிலதாகியங்கமின்றிப்பற்றின்றியவத்தையின்றிநின்றவொன்றை, யானுடைய

தியானிகளாயுறைகின்றோர் பிறப்பிலாவர் நிலைமையைக்
யுறுகின்றனமே. என்பனவாற்காண்க. [illegible] பு
ளாஸிருத்திடாசனமுநிருத்தியாசனப்பட்டுடைறுஙகுமி
யவாறுணர்க............................ (௰.)

மறைகளுக்குத்தாற்பரியப் பொருட்கொண்டுநிச்சயிக்கப்*
பிறருடையலிங்கவகைசெப்புங்காற் றிடபக்கமோடு...*
மறையுபசங்காரமப்பியாசமபூர்வத்துவம்...*
முறுகின்றபயனர்த்தவாதமுற்பத்தியென்றாறே...*

(இ—ள்.) மறைகளுக்குத்தாற்பரியம் - எல்லாவே தங்களினுடையதாற்பரியத்தையும் — வருத்தநித்துநிச்சயிக்கும் - பிறருடையமெய்த்தொழுக்கொள்ளுநிச்சயம்பண்ணுதற்கேதுவாகிய — பிறருடையலிங்கவகைசெப்புங்கால் - வரலாறுடையலிங்கபேதங்களைச்சொல்லுமிடத்தில் — உபக்கிரமமுபசங்காரம் - முதலென்றுசொல்லப்பட்ட வுபக்கிரமவுபசங்காரமும் — அப்பியாசமொடு - அப்பியாசமும் — அபூர்வத்துவம் - அபூர்வத்துவமும் — உறுகின்றபயன் - அடையத்தக்கபலமும் — அர்த்தவாதம் - அர்த்தவாதமும் — உற்பத்தி - உற்பத்தியும் — என்றாறே - ஆகியவிவ்வாறுமாமெய்யறியவாறு. உபக்கிரமமுபசங்காரமென்பதை யிரண்டிலிங்கமாகவுஞ்சிலராற்கொள்ளப்படுதலினிடையிலடைகொடுக்கப்பட்டது. ஈண்டிலிங்கமென்றது - குறிகொண்டுகாண்டல். இச்செய்யுளாலறுவகையிலிங்கத்

றின் பெயர்கூறியவாறுணர்க ............... (௰௨)

உபக்கிரமஞ்சிருட்டிக்குமுன்பிந்தவுலக .........
முருநாமரகிதசத்தாமாத்திரமாயுளதென் .....*
றபத்தமறப்பிரதிபாதிப்பதுபசங்கார .............
மகிலசகமுமச்சத்தின் சொரூபமேயதுவே ...*
விபத்தறுசத்தியமதுவேயான்மாவென் றுணர்த்தல்.
விளம்புமிந்தவிரண்டுமத்தொய்தவாத்மாலவத்*
தபுத்தலறப்பிரதிபாதிக்கின் றதனுஞன்மற்றித்........
தலைகயுபமுதலிலிங்கந்தமெனச்சாற்றிடுமே*

(இ—ள்.) உபக்கிரமம் - உபக்கிரமமாவதியாதெ
னில்—சிருட்டிக்குமுன்பிந்தவுலகம் - சங்கற்பசத்
தியாற்சிருட்டியாவதற்குமுன்பிச்சகமானது— உ
ருநாமரகிதசத்தாமாத்திரமாயுளதென்று - மாயா
ங்கிசமானவுருவநாமமில்லாதசத்தாமாத்திரப்பொ
ருளாயிருந்ததென்று— அபத்தமறப்பிரதிபாதிப்
பது - உண்மையாகவிடைவிடாது நிச்சயித்துச்
சொல்லுவதாம்—உபசங்காரம் - உபசங்காரமாவ
தியாதெனில் — அகிலசகமுமச்சத்தின் சொரூப
மே - எல்லாவுலகங்களுமச்சத்தாமாத்திரப்பொரு
ளினதுசொரூபமே—அதுவேவிபத்தறுசத்தியம்-
அப்பொருளேயாபத்தில்லாத மெய்ம்மைப்பொ
ருள்—அதுவேயான்மாவென் றுணர்த்தல்-அப்பொ
ருளேபிரத்தியேகாத்மாவென்றுகூறுதலாம்— வி
ளம்புமிந்தவிரண்டும் - சொல்லாநின்ற விவ்விரண்

பேதப்பொருளும்—அத்தொய்தவாத்மாவை - ஏ
கமாகியபரமாத்துமாவை— தபுத்தலறப்பிரதிபா
திக்கின்றதனால் - மெய்ப்படுய்படி நிரந்தரம் பிரதி
பாதிக்கின்றபடியினால்—மற்றித்தலைகயுபயம் - இ
த்தகுதியாகியவிரண்டுபேதப்பொருளும்— முதலி
லிங்கந்தாமெனனசாத்திரமே - பிரதமலிங்கமென்
று கூறப்படுமென்றவாறு.—உலகத்தோன்றுதகால
த்துந்தோன்றியகாலத்துஞ்சத்தினனு நிலை யொமே
பிரகாரமாயிருப்பதனாலுபக்கிரமமுஞ்சத்தே, உ
பசங்கார முஞ்சத்தேயென்று கூறியவாறாயிற்று.—
தபுதமென்பது - தபுத்தமெனவிகாரப்பட்டு நின்ற
து. மற்றென்பதசை நிலை. இதற்குப்பிரமாணம்.
ஞானவாசிட்டம் - அறிதொயறிவேமெய்யா யமல
மாயனைத்தாயாறிட், பிறிவுறுவரவுபோக்கில்பிரம
மேயுளதாமந்தச், செறிபொருட்சத்தித்தோற்றமா
த்திரஞ்செகமாய்நிற்கும், பொறிகள் பல்காட்சி
பொய்மையெபாருண் மெய்யேயென்றுவாழ்வாய்.—
என்பதனாற்காண்க. இச்செய்யுளான் முதலிலிங்கத்
திற்குப்பொருள்கூறியவாறுணர்க... ... .... (௰௫)

அப்பியாசமாவதுநீயேயாத்துமா நீயே... ........
யாத்துமாவென்றென்பதுபிரகாரம்பிரமத்...*
துப்பமைந்தவுபதேசமாமவ்வுபதேசந்.... ......
தனுஞ்சேதனனைக்கூட்டிச்சொல்வதாகையினா*
லொப்பிலாவந்தச்சேதனன்சொரூபத்துக்கே.....

யுறுமத்தொய்தாத்துமார்த்தமுறைக்கின்றபடியாற் *
செப்பரும்வாக்கிய நிலையாமிப்பொருண்மைதானே.
திகழிரண்டாமிலிங்கமெனச்செப்பலுறுமன்றே *

(இ—ள்.) அப்பியாசமாவது - அப்பியாசமென்னுமிலிங்கமாவதியாதெனில் — நீயேயாத்துமா நீயேயாத்துமாவென்று - நீயேபிரத்தியேகாத்தும சொரூப நீயேபிரத்தியேகாத்துமசொரூபமென்பதாக — ஒன்பதுபிரகாரம் - நவப்பிரகாரமாயுருக்கிக்கூறும் — பிரமத்துப்பமைந்தவுபதேசமாம் - பிரமபாவனையின்வலியமைந்தவுபதேசவாக்கியமாம் — அவ்வுபதேசம் - அந்தவுபதேசவாக்கியமானது — நானுஞ்சேதனனைக்கூட்டிச்சொல்வதாகையினால் - ஒருநிலைப்பட்டிருக்கின்றவதிட்டானசைதன்னியத்தைச்சேர்த்துக் கூறுகின்றதானபடியினால் — ஒப்பிலாவந்தச்சேதனன்சொரூபத்துக்கே - ஒப்புச்சொல்லக்கூடாதவந்தச்சைதன்னியமாகியசொரூபத்தினுக்கே — உறுமத்தொய்தாத்துமார்த்தமுறைக்கின்றபடியால் - பொருத்தமாகியவத்தொய்தப்பிரமார்த்தஞ் சொல்லுகின்றபடியினால் — செப்பரும்வாக்கியநிலையாமிப்பொருண்மைதானே - சொல்லுதற்கரியமகாவாக்கியநிலைமையானவிவ்வருத்தந்தானே — திகழிரண்டாமிலிங்கமெனச்செப்பலுறுமன்றே - விளங்காநின்றவிரண்டாவதிலிங்கமெனச் சொல்லப்படுமென்ற

வாறு.—இதனுட்பிரமத்துப்பமைந்தவுபதேசமென்றது - பரமாத்துமாவைத்தானாகக்கண்ட திடவுணர்ச்சியாற் கூறுமுபதேசமெனக்கொள்க. அன்றேயென்பதனைநிலை. இவ்விலிங்கத்தானவப்பிரகாரமுபதேசமென்றது - முப்பதத்தினும்மூன்றென்பதவத்தை நிலைகளையுமவற்றுளொழியு மஞ்ஞானபேதங்களையுநோக்கியென்க. இதற்குப்பிரமாணம். திருப்போரூர்ச்சந்நிதிமுறை - நனவில் வருகனவிற்சுழுத்தியிற்பொறிகரணநற்புருடனிற்பகுதியுநவில்காலபரமதிலசுத்தமாயையும் விண்ணினண்ணுபூரணமாயமேதா, நனவெனும்வியோமத்தினுஞ் சுத்தவித்தைமுதலொரு மூவகைக்கருவியுமொருபரமதுரியத்துவிந்துவும்மிளிர்விசுவமுண்டநிலையுயர்நாதமும்,வினவலுறுமுபசாந்தமதனின்மாமாயையுமிகுசொரூபமதனிலிருளும் விள்ளுமெனவுணர்செய்தெனுள்ளமலமகலவருள்விழிவழிப்பொழியுமுகிலே, தனபதியையெலுவனெனவுளமகிழுமரன்மதலைசப்பாணிகொட்டியருளே தடமலையநிகர்கரிகடிரி சமரபுரிமுருக சப்பாணிகொட்டியருளே. என்பதனாற்காண்க. இச்செய்யுளாலிரண்டாமிலிங்கத்திற்குப்பொருள் கூறியவாறுணர்க..........(௰௪)

சாற்றுமபூருவத்துவந்தானைப்பொருளாதலினாற்...
ரித்தவளவைகளிலுபநிடதவளவையினை......*

லேற்றவிலக்கணையா யாத்துமாவறியப்படுவ......
னிதரவளவைகளிலறியப்படானென் று......*
மூற்றமுறும் யூகமாமிஃதத்தொய்தாத்துமா......
வுழிசித்தமாகவேயுறுகின்றபடியா .........*
லாற்றலுறுமிப்பொருண்மைதனை மூன்றுமிலிங்க..
மாகவுரைத்திடப்படுமாலருஞ்சுருதிவழியே...*

(இ—ள்) சாற்றுமபூருவத்துவம் - அருமைப்படுத்திச்சொல்லா நின்றவபூருவத்துவவிலிங்கமாவதியாதெனில்—தானும்பொருளாதலினால் - தானானதன்மைப்பொருளானபடியால்— தரித்தவளவைகளில் - உலகத்திலமைந்தபிரமாணங்களுக்குள்ளே — உபநிடதவள்ளவையினால் - உபநிடதமாகியசத்தப்பிரமாணத்தினாலே—ஏற்றவிலக்கணையாய் - தகுதியாகியவிலக்கணையினாலே— ஆத்துமாவறியப்படுவன் - பிரத்தியேகாத்துமனானவனிங்ஙனமிருப்பனென்றுணரப்படுவான் — இதரவளவைகளிலறியப்படான் - ஏனையபிரமாணங்களாலேயெல்லாமறியப்படமாட்டான் —என்னுமூற்றமுறும்யூகமாம்- என்றுமதிக்கத்தக்கதானதிடமடைந்த சூக்குமபுத்தியாம் — இஃதத்தொய்தாத்துமாவுழி - இவ்வருத்தமத்தொய்தப்பிரமத்தினிடத்திலே—சித்தமாகவே - தாத்பரியமாகும்படி — உறுகின்றபடியால் - அமைந்திருக்குந்தன்மையினாலே— ஆற்றலுறுமிப்பொருண்மைதனை - திடமமைந்தவிவ்வாக்

கியார்த்தத்தை—அருஞ்சுருதிவழியே - அருமை யாகியவேதத்திற்கூறியநெறிப்படி— மூன்றாமிலிங்கமாகவுரைத்திடப்படும் - மூன்றாவதிலிங்கமாகச் சொல்லப்படுமென்றவாறு.—அருஞ்சுருதிவழியே மூன்றாமிலிங்கமாகவுரைத்திடப்படுமெனக்கூட்டுக.

க. ஆலவைசநிலை. இவ்விலிங்கத்துட்டானாகியபொருளாதலாற்சத்தப்பிரமாணமுன்னிலையிலன்றி முன்னிலைக்காட்சிமுதலிய பிரமாணங்களா லறியப்படாதென்றும், மற்றெவ்வாறறிவதெனில், மெய்யுணர்ச்சியாகிய தன்மைக்காட்சியாற்கருவிகடம்மை யறியப்புகுந்ததுபோலறிவதென்று, மிவ்வாறறிவததிகயூநத்தாலன்றி யறியப்படாதென்றுங் கூறியவாறாயிற்று. இதற்குப்பிரமாணம். ஞானவாசிட்டம் - ஒழிவறுமுயற்சிதன்னாலூகத்தாலுயர்ந்தநூலோர், விழிவறவியற்றுவோர்கட்கெப்பயனெளிதினெய்தா, வழிபடுநன்னூலாளர்வருபயன்கருதல்செய்யி, லொழிவறமுற்றுமுற்றியளவறுபயனைநல்கும். என்பதனாற்காண்க. இச்செய்யுளான்மூன்றாவதிலிங்கத்திற்குப்பொருள் கூறியவாறுணர்க........(௰௫)

பலமாவதத்தொய்தாத்துமக்கியானத்தினுக்குப்...
 பகர்பிராரத்தமெதுவரைநாசமிலையோ ....... *
புலமாமவ்வளவுக்குந்தேகாதிசகத்துப்..........
 பொய்யாகத்தோன்றிநிற்கும்புணரப்பிராரத்த*
முலமாவதொருமிக்கக்கெடுவதெக்காலக்காற். ....

குவலயஞ்சர்வாத்துமனாய்த்தோன்றாத்தொய்த*
நிலையாய்நின்றிடுமென்னப்பிரதிபாதித்திடுதே......
னிகழ்ந்துநாலாமிலிங்கமென நிகழ்த்துமன்றே*

(இ — ள்.) பலமாவது - பலமென்றுகூறுமிலிங்கமாவதியாதெனில் — அத்தொய்தாத்துமக்கியானத்திற்கு - அத்தொய்தப்பிரமக்கியானசித்தியிருலே — பகர்பிராரத்தம் - மூவகையாகச்சொல்லப்பட்டபிராரத்தகருமங்கள் — எதுவரைநாசமிலையோ - எவ்வளவுகாலமட்டுங்கெடாதநுபவிக்கப்படுகின்றதோ — புலமாமவ்வளவுக்கும் - விளங்குகின்றவக்காலத்திலெல்லாக்கும் — தேகாதிசகத்துப்பொய்யாகத்தோன்றிநிற்கும் - உடன்முதலியசகத்தோற்றங்களெல்லாமிருந்துமிராதாகிய பொய்த்தோற்றமாகக்காணப்பட்டுநிற்கும் — புணரப்பிராரத்தகுலமாவது - பொருந்தியிருக்கின்றவப்பிராரத்தகூட்டமானவை — ஒருமிக்கக்கெடுவதெக்காலக்கால் - ஒருங்கேநாசமாவதெந்தக்காலமோ வந்தக்காலத்தில் — குவலயஞ் சர்வாத்துமனாய்த்தோன்றா - உலகமெல்லாஞ்சர்வாத்தும பூரணானுபவமாய்க்காணப்படாமல் — அத்தொய்தநிலையாய்நின்றிடும் - சுட்டிறந்தசுகாதீதவத்தொய்தானுபவநிலையாயிருந்திடும் — என்னைப்பிரதிபாதித்திடுதல் - என்பதாகச்சாதித்துக்கூறுந் தன்மையாம் — நிகழ்ந்து - வழங்கிவருமித்தாத்பரியமே —

நாலாமிலிங்கமென நிகழ்த்தும்-நாலாவதிலிங்கமா
கக்கூறப்படுமென்றவாறு.— ஆதலுமகங்கியானத்தி
லுகமென்னுநான்கனுருபமூன்றனுருபின் பொரு
ட்கணதின்றது. பிராரத்தமூன்றென்றது-இச்சாபி
ராரத்தமும், அனிச்சாபிராரத்தமும், பரேச்சா
பிராரத்தமுமாகியமூன்றுமாம். இவ்விலிங்கத்து
ட்பிராரத்தமுள்ளவனாயுஞ் சீவன்முத்திநிலைக்க
ணமனத்திறுறுதலாசப்பட்டுப்பூரணநோக்கத்தோ
டுங்கூடிச்சகத்தோன்றியுந்தோன்றாதாய்ச் சர்வாத்
துமாவுபவமாயிருப்பனென்றமைப்பிராரத்த நாச
த்தின்பின்புமனவருவமுநாசப்பட்டுச்சுட்டிறந்தசு
காதீதமான விதேகசைவலியத்தைப்பெற்றிருப்
பனென்றுங் கூறுபவாறும். இதற்குப்பிரமாணம்.
ஞானவாசிட்டம் - சீவன்முத்திநனிவுருவநாசஞ்
சேதநர்தனக்குளதாம், தாவிலுடறீர்முத்தநிற்சா
ற்றுபயுருவநாசமுறு, மேவசித்தமுண்டாகிலிடரா
மிறக்கின்மிகுமிப்பய், பாவியுள்ளமெய்தாதவகை
பணணியமைநாசம்பயிலைவாய். என்பதனுற்கான்
க. இச்செய்யுளானுன்காமிலிங்கத்திற்குப்பொரு
ள்கூறியவாறுணர்க.............................(௰௫)

புகலுமமர்ந்தவாதமெத்தவத்துவைக்கேட்டதறைற்...
புலப்படக்கேளாந்துகேட்டதுவாகமெருந்துர்*
திருமொந்தவதுவைவசிந்திந்தத ருன்மனனந்...
செய்திடாவதுவைச்சிநதித்தநெதனசசெறியுந்*

தகவுறுமெவ்வத்துவினையறிந்ததனாலறியுந்.........
தன்மைபெறுதலையறிந்ததகுறியுறுமென்ன..*
நிகழ்த்துவாமிதுசொன்மேலருத்தம்விட்டத்தொய்த.
நிலைப்பொருடந்திடுமைந்தாமிலிங்கமெனநிசர்த்தார்....*

(இ—ள்.) புகலுமர்த்தவாதம் - அனுபவமாகக்கூறப்படுமர்த்தவாதமென்னுமிலிங்கமாவதியாதெனில்—எந்தவத்துவைக்கேட்டதனால் - அருமையானவெந்தப்பொருளைச்சிரவணம்பண்ணினதினாலே—புலப்படக்கேளாததுகேட்டதுவாகப் பொருந்தும் - இதுவரையில்விளங்கக்கேளாதபொருளைக்கேட்டதுவாகப்பொருந்திநிற்கும் — நிகழுமெந்தவத்துவைச்சிந்தித்ததனால் - பிரகாசிக்குமெந்தப்பொருளைச்சிந்தனைபண்ணினதினாலே—மனனஞ்செய்திடாவத்துவைச் சிந்தித்ததெனச்செறியும் இதுவரையிற் சிந்தனைசெய்யாதபொருளைச் சிந்தனைசெய்ததாகவமையும்—தகவுறுமெவ்வத்துவினையறிந்ததனால் - தகுதிபெற்றவெந்தப்பொருளை யுணர்ந்ததினாலே — அறியுந்தன்மைபெறுதலையறிந்ததகுறியுறும் - இதுவரையிலறியப்படுந்தன்மைபெறுதபொருளையறிந்ததகைமைப்பாடிசைவதாம்—என்னநிகழ்த்துவாம் - என்பதாகமதிக்கப்படுமித்தன்மையாம் — இதுசொன்மேலருத்தம்விட்டு - இத்தாத்பரியம்வாசகத்தின்மேலமைந்த பொருளையொழித்து —- அத்தொய்தநிலைப்பொருட்ந்

திடும் - இரண்டற்றநிலையானபரமாத்துமார்த்தத்
தைக்கொடுப்பதனாலிங்கத்து — ஐந்தாமிலிங்கமென
நிகழ்த்தும் - ஐந்தாவதிலிங்கமெனக்கூறப்படுமெ
ன்றவாறு.—இவ்விலிங்கத்துட்கேளாததுகேட்டதா
கவும், நினையாததுநினைந்ததாகவும், அறியாததறிந்
ததாகவும், குருமுன்னிலையிற்கேட்டுச்சிந்தித்தறியு
மெய்யுணர்ச்சியைக்கூறியது. இதற்குப்பிரமாண
ம். ஞானவாசிட்டம் - அந்தோவந்தோவிதுநெடு
நாளறிந்திலேனின்றறிவுற்ற, சந்தோடத்தையென்
சொல்வேன்சகலநினைவுஞ்சமித்தாறி, நொந்தோ
ரின்பதுன்பத்தானோவாதிருக்குமிடமிதுவோ, வு
ய்ந்தோருறையும்பதமிதுவோ வுபசாந்தத்தினுயர்
விதுவோ. என்பதனைக்காண்க. இச்செய்யுளாலைந்
தாமிலிங்கத்திற்குப்பொருள்கூறியவாறுணர்க (௰௭)

கூறிடுமுற்பத்திமண்ணாற்பிறந்திடுகும்பாதி .......
குவிதநிமண்ணைத்தவிரவேறுதோற்றிடினுந். *
தேறுபொருளாலேயேயில்லையெனும்யுத்தித்.....
திறப்படிபிராத்தியேகாததுடைப்பிரமமுஞ்சகத்து *
வேறுதோற்றிலும்பொருளால்வேற்றுமையின்றென்ன.
விளம்பும்புத்திபாலபின்னத்துவம்பிரிபாதித்து *
மாறகலும்பிராத்தியேகாத்துமாயுக்கத்தொய்தம்...
வகுத்திடுமோலிங்கதாருமலிங்கமதாமாதோ. ....*

(இ — ள்) கூறிடுமுற்பத்தி - ஒருமைப்பாடாகச்
சொல்லுமுற்பத்தியென்னுமிலிங்கமாவது யாதெ

னில்—மண்ணாற்பிறந்திடுகும்பாதி - பிரிதிவியிலு
ண்டாகுங்கடமுதலியகாரியரூபங்கள்—குறித்திடு
மண்ணைத்தவிரவேறுதோற்றிடினும் - அதுவதுவா
கக்குறித்துணரப்படுங்காரணமாகியபிரிதிவியைத்
தவிரவேறுபட்டுத்தோற்றினாலும்— தேறுபொரு
ளாலேவேறில்லையெனும்யுத்தித்திறப்படி - தெளி
ந்துணரும்பொருட்பகுப்பாற் பார்க்குமளவில
வேறுபடாதென்றறியும்யூகத்தகுதிப்பிரகாரமே—
பிரத்தியேகாத்துமப்பிரமமூறுஞ்சகத்து - பிரத்
தியேகாத்துமாவாகியபரப்பிரமசொரூபத்திற்கா
ரியத்தோற்றமாய்க்காணப்படு மிச்சகமானது —
வேறுதோற்றினும் - அப்பிரமத்தைவிடவேறாகச்
சங்கற்பசத்தியாற்காணப்பட்டாலும் — பொரு
ளால்வேற்றுமையின்றெனின - அதுவதுவாகிய
பொருட்டன்மையால் வேறுபாடில்லையென்று —
விளம்பும்யுத்தியால் - கூறப்படுமபேதயுத்தியினு
லே — அபின்னத்துவம்பிரதிபாதித்து - பிரமத்
திற்குமூலகத்திற்குமபின்னதருமத்தைவற்புறுத்தி
க்கூறி — மாறகலும்பிரத்தியேகாத்துமாவுக்கு -
மாறுபடுதலில்லாதபிரத்தியேகாத்துமனாகிய கூட
த்தனுக்கு— அத்தொய்தம்வகுத்திடுமால் - சுட்டி
றந்தவேகத்துவஞ்சாதியாநிற்குமாதலால்— இஃ
து- இத்தாத்பரியமே—ஆருமிலிங்கமதாம்-ஆரு
வதிலிங்கமென்றுகூறப்படுமென்றவாறு.— இவ்வி
லிங்கத்துட்காரணகாரியத்தோற்றத்தாற் பேதமா

யினுமதுவதுவாகியபொருளாலபேதமென்று கூறியவாறும். இதற்குப்பிரமாணம். ஞானவாசிட்டம் - உன்னுறுமனத்தினாலேயுலகமாமிந்திரசாலந், துன்னுறுபணிகளென்னுஞ்சொற்பொருள்பொன்னையன்றி, யன்னியமில்லைபொன்னாற்பணியெனவறைதல்வேண்டா, பன்னியவுலகாஞ்சொற்குப்பரமன்றிப்பொருள்வேறில்லை. என்பதனாற்காண்க. இச்செய்யுளாலாறுமிலிங்கத்திற்குப் பொருள்கூறியவாறுணர்க.............................. (௰௮)

இவ்வகையாமிலிங்கமோராறினு..................
    மெழின்மறைக்குச்........ .............. *
செவ்வியதாத்பரியமெவன் ..... ................
    றிரமுறநிச்சயிப்பானே...................*
யவ்வறிவினோன்றனக்குச...... ............ ......
    சிரவணமாத்திரத்தாலே.......... .........*
திவ்வியவத்தொய்தாத்துமக்........................
    கியானம்வருந்திடமுறவே............ ...... *

(இ—ள்.) இவ்வகையாமிலிங்கமோராறினும் - இப்பிரிவுபட்டவிலிங்கங்களோராறினும்—எழின்மறைக்கு - அழகியவேதவாக்கியங்கட்கு— செவ்வியதாத்பரியம் - செவ்வையானதாத்பரியார்த்தத்தை—எவன்றிரமுறநிச்சயிப்பானே - திடப்படும்படிநிச்சயம்பண்ணுமவனியாவனே— அவ்வறிவினோன்றனக்கு - விவேகத்தையுடையவந்தப்புரு

டனுக்கு—சிரவணமாத்திரத்தாலே - தகுந்தவிசாரணையானகேள்வித்திடத்தினாற்றானே — திடமுறவே - திடபாவனையமையும்படி—திவ்வியவத்தொயித்தாத்துமக்கியானம்வரும் - மிகுந்தநன்மையாகியவத்தொய்தப்பிரமக்கியானமுண்டா மென்றவாறு.—திடமுறவேதிவ்வியவத்தொய்தாத்துமக்கியானம்வருமெனக்கூட்டுக. சிரவணமாத்திரத்தாலேயத்தொய்தாத்துமக்கியானம்வருமென்றது-நிச்சயக்கியானப்பிராப்த்தியைவலியுறுத்திக் கூறியதாம். இச்செய்யுளாலாறுலிங்கமுன்னிலையிற்சிரவணப்பண்ணியமாத்திரத்தா னிச்சயக்கியான நிலையுண்டாமென்றுகூறியவாறுணர்க ............. (மிக)

உரைத்திடுமாறுசமாதியுட்கடாதி............ ...
யுற்றிடும்விடயவீட்டத்து.........................
லொன்றனைக்குறித்தந்நாமரூபமென.........
வோதுமாயாங்கசங்களிரண்டும்...............*
பிரித்ததிலத்திபாதிப்பிரியமெனப்..............
பேசிடுசச்சிதாநந்தப்........ ............ ......
பிரமவங்சத்திரயானுசந்தானம் .... .........
பெறல்புறத்திரிசியானுவித்தந்..............*
தரித்திடுமெகண்டசச்சிதாநந்தத்.... ..............
தகைமையாமத்தொய்தசொரூப... .........
சகசமெய்ப்பிரமமென்றறியாளித்தல் ...... ...
சாற்றிடும்புறச்சத்தானுவித்தங்... .........*

கலைத்தவிவ்விருசமாதியப்பியாசக்....... ... ...
கருத்திறைப்பிரமவாநந்தக்.....................
காட்சியின்மனம்போய்ச்சலனமற்றிடல்பா......
கியநிருவிகற்பயோகமதே... ...... ... ...*

(இ—ள்.) உரைத்திடுமாறுசமாதியுள்-வேதாதிகளாற்சொல்லப்பட்டசட்சமாதிகளுள்ளும் — கடாதியுற்றிடும்விடயவீட்டத்துள் - கடபடாதியாகவமைந்தவிடயசமூகங்களுக்குள் — ஒன்றனைக்குறித்து- ஓர்பொருளைக்குறித்துக்கொண்டுநோக்கி—அந்நாமருபமெனவோது - அந்தநாமரூபமென்றுசொல்லப்படும்—மாயாங்சங்களிரண்டும்பிரித்து - மாயாதருபங்களிரண்டையும் வேறுபடுத்தி — அதிலத்திபாதிப்பிரியமெனப்பேசிடு - அப்பொருளினிடத்திருப்புணர்ச்சி சுகமென்று சொல்லப்படுகின்ற — சச்சிதாநந்தப்பிரமவங்சத்திரயானுசந்தானம் - சத்துச்சித்தாநந்தமாகியபிரமவங்சத்திரயங்களையுமனுசந்தானம்பண்ணும்படி — பெறல்புறத்திரிசியானுவித்தம் - பெற்றுக்கொண்டிருந்தலேயாகியதிரிசியானுவித்தசமாதியாம் — தரித்திடுமகண்டசச்சிதாநந்தத்தகைமையாம் - பொருத்தமானவகண்டபரிபூரணசச்சிதாநந்த சுபாவமாகிய — அத்தொய்தசொரூபசகசமெய்ப்பிரமம் - ஏகவடிவானசகசவனுபூதியினிரந்தரங்காணப்பட்டசத்தியமாகிய பிரமமே தோற்றவெகல்லா

ம்——என் றுதியாணித்தல் - என்பதாகவிடைவிடாது
சிந்தித்தலே —— சாற்றிடும்புறச்சத்தானுவித்தம்
சொல்லும்படியானபாகிய சத்தானுவித்தசமாதி
யாம்—— களைத்தவிவ்விருசமாதியப்பியாசக்கருத்
தினால் - சொல்லப்படுகின்றவிந்தவிருவகையாகிய
சமாதிப்பயிற்சிச்சிந்தனையினாலே——பிரமவாநந்த
க்காட்சியின்மனம்போய்ச்சலனமற்றிடல் - பிரம
வாநந்தத்தோற்றத்தின் கண்மனமொக்கினமடைந்
துசலிப்பறநிற்றலே —— பாகிய நிருவிகற்பயோ
கமதே - பாகிய நிருவிகற்பசமாதியாமென்றவா
று. —— களைந்தவென்பது - களைத்தவெனவிகாரப்
பட்டுநின்றது.............................. (உ௰)

இசைத்திடுமனத்திற்காமசங்கற்ப...............
மாதியவேதிரிசியநா.........................
னிதற்கெலாஞ்சாட்சியெனுமனுசந்தா.........
னம்மகத்திரிசியானுவித்த.....................*
மொசித்தலிலசங்கசச்சிதாநந்த...................
வுண்மையாஞ்சுயம்பிரகாச.......................
வொருபொருடானென்றுன்னுதல்செயலே...
யுளாத்திடுமகச்சத்தானுவித்த..................*
நசித்திடாவந்தச்சுவானுபூதியினு..................
ளூட்டியதிரிசியமுடனே.........................
நவின்றிடுசத்தமெனுமிவைவிட்டு..............
நலிவிலாநிவாதீபம்போ.......................*

லசைத்தலில்லா நிற்சிந்தைரூபமதா...............
யமைந்திடலக நிருவிகற்ப......................
மாகியசமாதியிவற்றினின் றிடுவோ..............
னகமெங்கங்கேசமாதியதே...................*

(இ—ள்.) இசைத்திடுமனத்திற்காமசங்கற்பமாதி யவேதிரிசியம் - சொல்லப்படுகின்றநெஞ்சத்திற் றோன்றுங்காமசங்கற்பமுதலானவைகளேமுன்னிலைத்தோற்றங்களாம் — நானிதற்கெலாஞ்சாட்சியெனுமனுசந்தானம் - யானித்தோற்றங்களுக்கெல்லாஞ் சாட்சிசைதன்னியனாயிருக்கின்றேனென்னுமிடைவிடாதசிந்தனையே—அகத்திரிசியானுவித்தம் - அந்தரங்கதிரிசியானுவித்தசமாதியாம் — ஒசித்தலில்சங்கசச்சிதாநந்தவுண்மையாம் - கெடுதலில்லாமலொன்றேடுந்தாக்கற்றிருக்கின்ற சத்துச்சித்தாநந்தமெய்ப்பொருளாகிய— சுயம்பிரகாசவொருபொருடானென்றுன்னுதல்செயலே - சுயமாய்ப்பிரகாசிக்கின்றவொப்பற்றவத்துத்தானென்றிடைவிடாதுசிந்தித்தலே—உரைத்திடுமகச்சத்தானுவித்தம் - சொல்லப்படுமந்தரங்கசத்தானுவித்தசமாதியாம்—நசித்திடாவந்தச்சுவானுபூதியினால்-கெடாதவந்தத்தன்னனுபூதிநிட்டையினாலே— நாட்டியதிரிசியமுடனே நவின்றிடு சத்தமெனுமிவைவிட்டு - நாட்டிச்சொல்லப்பட்ட முன்னிலையுடனேகூறுஞ்சத்தாமாத்திரநோக்கமாகியவிவ்விர

ண்டினையுந்தள்ளி — நலிவிலா நிவாத தீபம்போல் - கெடுதலில்லாத நிவாதத்தலத்திலிட்டவிளக்குப்போலும்—அசைத்தலில்லா நிற்சிந்தைரூபமதாயமைந்திடல் - யாராலுங்கலக்கக்கூடாத நிற்சிந்தாமயசொரூபமாயமைந்திருத்தலே — அகநிருவிகற்பமாகியசமாதி - அந்தரங்கநிருவிகற்பசமாதியாம்—இவற்றினின்றும் வேறாகவெங்கங்கேசமாதியதே - இச்சமாதிகளிலிவைவிடாமனிலைத்திருக்குன்றவனுள்ளமெவ்விடமோவவ்விடமேசமாதியாமென்றவாறு. சத்தமென்பதன்கண் - அம்மென்பது சாரியை. இங்ஙனம்பாகியவந்தரங்கமேபதத்தாற் கூறுஞ்சட்சமாதிகளும் - திரிசியானுவித்தம், சத்தானுவித்தம், நிருவிகற்பமென்னு மூன்றனுளடங்குவதாம். இதற்குப்பிரமாணம். உத்தொடாய் தானுபவம் - அறியப்பட்டவெலாந்தள்ளியறியுருவாமதிட்டானமதுநானென்னும், வெறியற்றவறியுவந்தாலதுதிரிசியானுவித்தவிகற்பமென்பார், நெறியிற்சத்துச்சித்தகண்டாநந்தவுருநானென்றோர் நினைவுசெய்து, குறியிற்கண்டாற்சத்தானுவித்தமெனுஞ் சமாதியென்பர்குறிப்பறிந்தே. சுகம்பெறுசின்மயநானென்றெண்ணிடத்திற்பிரவஞ்சம் பொய்யாய்த்தோன்றுமதன்றி, மகண்டசுகஞானரசமனுபவித்தாற் சவிகற்பமாகுமன்றே, விகழ்ந்தவிடயமுமறிவு நானெனவுமனதடங்கிநல்லாந்தள்ளி, யுகந்துதானெனவிளங்குமறிவுருவே நி

ருவிகற்பயோகமாமே. என்பனவாற்காண்க.(உக)

☞ இவ்விரண்டுசெய்யுளானுஞ்சட்சமாதியும வற்றிற்குப்பொருளுங்கூறியவாறுணர்க.

கருதுநதியின்புனலெல்லாங்....................
கடலிற்கலந்தொன்றுமதுபோல்............*
விரதமீமாஞ்சாதிமத........................
விதமெல்லாமேகத்துவமாஞ்..............*
சரதவேதாந்தத்துண்மைய.....................
சாற்றிற்சச்சிதாநந்த.......................*
நிரதிசயவத்துவைத்தாய்....................
நினைவொன்றின்றிக்காண்பதுவே............*

(இ—ள்.) கருதுநதியின்புனலெல்லாம் - மதித்துரைத்தநதிப்பிரவாகநீர்களெல்லாம்— கடலிற்கலந்தொன்றுமதுபோல் - கடல்வெள்ளத்தோடேகூடியேகப்பிரவாகநீரானதுபோல—விரதமீமாஞ்சாதிமதவிதமெல்லாம் - விரதங்களைக்கொண்டிருக்கும்பூர்வமீமாஞ்சைமுதலியமதபேதங்களெல்லாம்—ஏகத்துவமாஞ்சரதவேதாந்தத்துண்மைசாற்றில் - ஒன்றாகத்தக்கசத்தியமானவேதமுடிவினிற்கூறுநிச்சயார்த்தத்தைச்சொல்லுமிடத்தில்—சச்சிதாநந்தநிரதிசயவத்துவைத்தாய் - சத்துச்சித்தாநந்தமாய் நிரதிசயமாகியபொருளையெதிரீடற்றுத்தன்சுபாவமாய்— நினைவொன்றின்றிக்காண்பதுவே - யாதோர்சங்கற்பமுமில்லாமலசங்

கற்பநெறியாற்காண்டலென்றவாறு. இதனுள்விதமீமாஞ்சாதிமதவிதமெல்லாமேகத்துவமாஞ்சரதவேதாந்தத்துண்மைசாற்றிலென்றதனால் - குருரானைகண்டதுபோல்விச்சின்னமாய்க்கூறுமதபேதங்களெல்லாமிவ்வேதாந்தநெறியா லொன்றுபட்டபேதமாய்விளங்குமெனக்கொள்க. இதற்குப்பிரமாணம். தத்துவராயர் - தலைபல்வாய்ப்பெயர்பல்வாநதிகளெல்லாஞ்சாகரத்திலொரு நீராந்தன்மைபோலப், பலபலவாய்ச்செல்லுநெறி யெல்லாஞ்சொல்லப்பட்டதொருபொருளினையாம்பணிதல்செய்வாம். என்பதனாற்காண்க. இதனுளெனினைவொன்றின்றிக்காண்பதற்குப்பிரமாணம். ஞானவாசிட்டம் - இங்குப்பன்னும்பலவாலென்னியப்புசுருக்கமிதுகேளாய், சங்கற்பந்தான்பவபந்தஞ்சங்கற்பந் தீர்ந்ததுமுத்தி, பங்கற்றெல்லையழிவிலவுபவமற்றியாதுமறிவுருவே, துங்கச்சகங்களெனநோக்கிச்சுகமெப்படியப்படிநிற்பாய். என்பதனானும். சகசபதிகம் - தந்தைதாயுடனேதயர்மகவென்னத்தரித்திடுமுறைமைகளிலதாய், நிந்தனைதுதித்தல் விருப்பொடுவெறுப்பு நினைப்பொடுமெறப்பென்பதிலதாய், வித்தைசேரிந்திராசாலமாமுலகவித்தைகாண்சுத்தநிற்குணமாய்ச், சிந்தனைக்கடங்காச்சுயஞ்சுடரறிவாய்ச் சிந்தையற்றிருப்பதுசிவமே. என்பதனானுங்காண்க. இச்செய்யுளான்மதங்களெல்லாமடங்கிய வேதாந்தநிலைநினைவொ

பஃறின்றிக்காண்டலெனக்கூறியவாறுணர்க...(௨௨)

அவ்வாறறியுஞ்சச்சிதாநந்தப்பிரமந்தனிலகிலந்..*
தவ்வாப்பழுதைதனிற்பாம்புதன்னைக்காண்டன்மானுமென*
விவ்வாறுனைக்குமாரோபவபவாதந்தினியவுணர்ந்து*
செவ்வாய்க்காண்பான்காட்சியறத்திகழ்தலனுபூதித்திறனே..*

(இ—ள்.) அவ்வாறறியுஞ்சச்சிதாநந்தப்பிரமந்தனிலகிலம் - அப்பிரகாரமசங்கற்பநெறியாலுணருஞ் சச்சிதாநந்தப்பிரமசொரூபத்தினிடத்திலிவ்வுலகந்தோன்றுவது — தவ்வாப்பழுதைதனிற்பாம்புதன்னைக்காண்டன்மானுமென - கெடாதபழுதையினிடத்தில்லாத பாம்பைக் காண்பதற்கொப்பாகுமென்று — இவ்வாறுனைக்குமாரோபவபவாதத்தினியவுணர்ந்து - இங்ஙனமெடுத்துக்கூறுமத்தியாரோபவபவாதத்தினிலக்கணத்தை விசாரணைசெய்து — செவ்வாய்க்காண்பான்காட்சியறத்திகழ்தலனுபூதித்திறனே - செவ்விதாகத்திருக்கென்பதுந்திரிசியமென்பதுமில்லாமற்றானேதானாய்விளங்குவதுண்மையானவனுபவநிலையாமென்றவாறு.— காண்பான்காட்சியறத்திகழ்தலனுபூதித்திறனென்றமையால்-திருபுடியற்றுத்தானேதானாயழுந்திநின்றதுண்மை நிலையென்பதாயிற்று. இதனுளாரோபவபவாதத்தினியவுணர்ந்தென்பதற்குப் பிரமாணம். வேதாந்தசூடாமணி - அத்தியாரோபமபவாதமெனவிரண்டாயறைகுவதாமதிலத்தியாரோ

பமுள்ள, சுத்தியூடிலாதவிரசிதம்விளைத்தல்போ
லச்சொலும்பிரமசத்தினிலாவுலகதுகற்பித்த, லெ
ய்த்ததுதான்வெள்ளியதன்றிப்பியெனல்போலோ
ர்ந்திறைமெய்பொய்யுலகமெனத்தெளிதலபவாத,
மெய்த்தபொருளறியுமிலக்கணை மூன்றுமவைதா
ம்விளங்கதத்துவாவிருத்திதடத்தமொருசொரூப
ம். என்பதனுற்காண்க. இதனுட்காண்பான்கா
ட்சியறத்திகழ்தற்குப்பிரமாணம். ஞானவாசிட்ட
ம் - காண்பானுங்காண்பனவுங்காட்சியும்வாதனையு
டனேகழலவிட்டுச், சேண்பாயுங்காட்சிக்குமுத
லொளியாமச்சொரூபஞ்சிந்தைசெய்வா, மேண்
பாலாமுள்ளதிலதெனுமிரண்டினிடையெய்தி யிர
விலாதாய், மாண்பானவொளிக்கெல்லாமொளி
யாமச்சொரூபத்தைமதித்தல்செய்வாம். என்பத
னுற்காண்க. இச்செய்யுளாலத்தியாரோபவபவாத
விலக்கணமறிந்துகாண்பான் காட்சியற்றனுபவிக்
குமனுபூதியைக்கூறியவாறுணர்க...... ......(௨௫)

விளங்குகாலமும்மையினும்வீடாதுளதாயதுசத்துஞ் *
களங்கமின்றிப்பேதநெறிக்காட்சியறியுமதுசித்துந் ..*
துளங்கலில்லாச்சுகவடிவாய்த்தோன்றியழியாதாநந்த *
முளங்கொண்டிந்தச்சச்சிதாநந்தமெலாமாயுணர்கவே...*

(இ—ள்.) விளங்குகாலமும்மையினும்வீடாதுள
தாமதுசத்து - பிரகாசிக்கின்றவிறப்பெதிர்வுநிகழ்
வென்னுமூன்றுகாலத்தினுங்கெடாதுநித்தியநிலை

யாயிருக்குமதுவேசத்தாகும் — களங்கமின்றிப் பேதநெறிக்காட்சியறியுமதுசித்து - யாதொருமலினமுமில்லாதுசுத்தமாய் வேறுபட்டமார்க்கத் தோற்றங்களெல்லாமிதுவிதுவென்று பகுத்தறிந்துகொண்டிருக்குமஃதேசித்தாகும்— துளங்கலில்லாச்சுகவடிவாய்த்தோன்றியழியாதாநந்தம் - கலங்குதலில்லாதநித்தியசுகசொரூபமாய் விடயாநந்தம்போலுற்பத்திலயமில்லாததே யாநந்தமாய்—உளங்கொண்டிந்தச்சச்சிதாநந்தமெலாமாயுணர்கவே - இராமானசிந்தனைத்திடங்கொண்டிந்தச் சச்சிதாநந்தசொரூபமேகாண்பான்காட்சியாகிய யாவுமாயிருப்பதென்றறிகவென்றவாறு.—இதனுள், சச்சிதாநந்தமெலாமாயுணர்கவென்றதனுல் - சொற்பனக்காட்சியச்சொற்பனங்கண்டவறிவையன்றிவேறில்லாததுபோலநாமரூபமாகியசங்கற்பக் காட்சியச்சங்கற்பத்தைக்கண்டவறிவையன்றிவேறின்றெனவுணரவேண்டுமென்பதாம். இங்ஙனங்கூறியசத்துச்சித்தாநந்தத்திற்குப்பிரமாணம். நவநீத கைவல்லியம் - இகமானகுருநாதனே சச்சிதாநந்தமெனுமிலக்கணமறிகிலேன், னகலாதசத்தாவதே துசித்தாவதேதாநந்தமேதென்றிடின், மிகுகால மூன்றுங்கெடாதிருப்பது சத்துவேறுபாடறிதல் சித்தா, மகிழ்காமநுகர்போதுசுகமாகுமநுபூதி வாழ்வென்பதாநந்தமே. என்பதனுனும். அத் தொய்தவுண்மை - எந்தச்சத்திலசத்தாகுமிந்தவுல

கஞ்சத்தாகு, மெந்தச்சித்திலசித்தாகுமிந்தவுலக
ந்தான்விளங்கு, மெந்தவின்பிற்றுன்பாகுமிந்தவு
லகமின்பாகு, மந்தச்சற்சித்தா நந்தமதுவேநமது
வடிவமே. என்பதனுலுங்காண்க. இச்செய்யுளா
ற்சச்சிதா நந்தத்திற்குப் பொருள் கூறியவாறுண
ர்க.......................................(உச)

சத்தின துவகையாகுமூன்றினிற்சாக்கிரத்திற்......
சார்ந்திடுகும்பாதிசத்தேவிதேககைவல்லியாநந்த*
மெத்துசுழுத்தியதாதியவத்தையிற்றோன்றுமல். .
விரிந்தெழுங்காற்றோன் றுகையால்வியகாரிகமதாஞ்*
சுத்திகாரசிதங்களுவிடயாதிசத்தே..................
தோய்ந்தும்விழித்தாலிலையாற்பிராதிபாதிகமா*
மித்தையதாமகிலகற்பனைக்குமப்பாலாகி.........
விதிலயமில்பிரமசத்தேவிளும்பரமார்த்திகமே*

(இ—ள்.) சத்தின துவகையாகுமூன்றினில் - சத்
தினதிலக்கணப்பிறிவாகியமூன்றனுள்ளும் — சா
க்கிரத்திற்சார்ந்திடுகும்பாதிசத்தே - சாக்கிரத்திற்
பொருந்தியிருக்கின்றகடாதி தோற்றத்திருப்பாகி
யசத்தே—விதேககைவல்லியாநந்தம் - விதேகமுத்
தியடையுங்காலாநந்தவளாக்கும்— மெத்துசுழுத்தி
யதாதியவத்தையிற்றோன்றுமல் - பொருத்தமா
னசுழுத்திமுதலியவவத்தைகளிற் றோற்றமில்லாம
ல்—விரிந்தெழுங்காற்றோன் றுகையால் - கோரவி
ருத்திவிவகாரத்தில் விரிந்தெழுந்தபோதுகாணப்

படுகின்றபடியினால்—விவகாரிகமதாம் - விவகாரி
கசத்தென்றுசொல்லப்படும்—சுத்திகாரசிதங்களை
விடயாநிசத்தே - கிளிஞ்சிலிடத்துவெள்ளியுங்க
ளைவிலேவிடயமாகியதோற்றமுமுதலான திரிப்ப
ட்டிருக்கின்றசத்துத்தானே—தோய்ந்தும்விழித்
தாலிலையால் - அப்போதுமெய்யாய்ப்பொருந்தி
யிருந்தும்விழித்துப்பார்த்தகாலத்தில்லாதபடியி
னல்—பிராதிபாதிகமாம் - பிராதிபாதிகசத்தென்
றுசொல்லப்படும்—மித்தையதாமகில்கற்பனைக்கு
மப்பாலாகி - பொய்யாகியசகலகற்பனைக்காட்சிக்
குமப்பாற்பட்டதாகி— விதிலயமில்பிரமசத்தே-
தோற்றவொடுக்கமில்லாதபிரமசொரூபமாகிய ச
த்தே—விளும்பரமார்த்திகமே - விசேடமாகவெ
டுத்துக்கூறும்பாரமார்த்திகசத்தாமென்றவாறு.—
இதனாலெக்காலத்திலுஞ் சத்தினது தோற்றமுண்
டாமென்றுகூறியவாறும். இங்ஙனங்கூறியதிரிவித
சத்துக்குப்பிரமாணம். வேதாந்தசூடாமணி - ஆ
தலினலாநந்தமயமாமான்மாவைந்தினுக்கு முபா
தியுளவவைமுறையேமொழியிற், பேதமுறுஞ்ச
த்துமூன்றாய்விவகாரிகம்பின்பிராதிபாதிகம் பார
மார்த்திகசத்தெனவே, மூதுணர்விற் சுழுத்தியிற்
றோன்றாது நனவுற்று மூத்தியுறுமளவுமுறுங்கடா
திமுதலதுவாம், போதுகனவினிற்றோன்றியழிவ
திடையதுவாம்பொன்றாதபிரமசத்தேயிறுதியதா
மன்றே. என்பதனாற்காண்க. இச்செய்யுளர்த்ச

த்தின துவகையுமவற்றின்பொருளுங் கூறியவாறு
ணர்க......................................(உரு)

சித்தின துவகை நான்கிற்..........................
  செறிகடநீர்விம்பவெளிசீவனுகு....................*
மொய்த்தவான்புனற்பிரிதி.........................
  விம்பமீச்சுரனுகுமொழியுங்கும்பத்..........*
நெய்த்தலிலாதுறையும்வெளி.........................
  கூடத்தன்மகத்தானவேகவிண்ணே.........*
நித்தியமாம்பரப்பிரம...........................
  வித்தகசிதாகாசநிலைமையாமே................*

(இ—ள்.) சித்தின துவகை நான்கில் - சித்தின தூபி
றிவாகிய நான்கினுள்ளும்— செறிகடநீர்விம்பவெ
ளிசீவனுகும் - தோற்றுதற்குப்பொருத்தமான கட
சலத்திற்காணப்படுகின்றவிம்பாகாசம்போன்ற பி
ரிதிவிம்பவெளியேசீவனுக்குத்திட்டாந்திரமாம் —
மொய்த்தவான்புனற்பிரிதிவிம்பமீச்சுரனுகும்-ஆ
காசத்திற்கூடியிருக்கின்றமேகசலத்தின்மகாகாச
விம்பம்பிரதிவிம்பமானதேமீச்சுரனுக்குத்திட்டா
ந்திரமாகும்—மொழியுங்கும்பத்தெய்த்தலிலாது
றையும்வெளிகூடத்தன் - மேற்சொல்லப்படுகின்
றகடத்தின்கண்பின்னமில்லாதுவசிக்கின்ற வாகாய
மேகூடத்தனுக்குத்திட்டாந்திரமாம்—மகத்தான
வேகவிண்ணே - எங்கனுமேகாகாரமாயிருக்கின்ற
பெரிதானவிவ்வாகாசமே— நித்தியமாம்பரப்பிர

மலித்தகசிதாகாசநிலைமையாமே - நித்தியநிலையா
னபரம்பிரமவத்துவென்று சொல்லப்பட்ட அறிவு
சொரூபமாகிய ஞானாகாசத்தினிறைக்குநிட்டாநு
பூதிமாயமையுமாறு. — இதனுட்பிரத்தியபசௌ
நுனியப்பிரமனென்றும்பிரபஞ்சசம்பவிதப்பிரமணெ
னென்றுங்கூறியதாம். இங்ஙனங்கூறியசித்துசது
ட்டயத்திற்குப்பிரமாணம். வேதாந்தசூடாமணி-
யிலஞ்ஞானசங்கூடத்தன் பிரமமெனச்சுத்தநான்
காங்கு நீர்த்திரையுமென்பீன்வாய், தாவடணிநீ
ரிவ்வப்பின்னமாகாசஞ்சொல்கடவிச்சிவ்வுணாக
மெய்யியாவான், மேவுமிலையவற்றினுக்குந்தட்
டாந்தமுளாட்பவிடயமேலாம்பிரமம் வாசனைமுக்கி
யமின், மேவுநிர்வாணமாவேயாடத்துவிதட்வித்
தைப்பெறுமிவத்தம் வெய்யராமென்வகைப்படுமாத
ந்தம். என்பதனுலும். திருப்போரூர்ச்சந்நிதிமு
றை - சித்தொரூபங்கூடம் பிரமங்கூடத்தன் செப்பு
மாயாரகிதங்கள், மத்தமிலிசனுயிர்கடாமமாயாக
கிதங்கள்யமுத்துமிசல், சத்தெனுந்தலைமைறப்
பிலாவையிருற்றகுகதிதேசடிணைசீவன், பொய்த்
தலிவீம்தும்டென்றிசைத்தான் போரிவாமூரு
மாமுகனே, என்பதனுனுங்காண்க. இச்செய்யு
ளாற்சித்தினதுவகையுமசற்றிற்குப்பொருளுங் கூ
றியவாறுணர்க............................(௨௬)

திசழ்மாநந்தமெண்வகையவற்றுட் ... ... ... ...
டெரிவைமுன்விடயலாபத்திற்............ ... ...

செனிப்பதுவிடயசுகஞ்சுழுத்தியினிற்.........
செறிவதுபிரமவாநந்த.......................*
மகிழுநித்திரைநீத்துணர்ந்துமோராத.............
வாசனைவாசனுநந்த.........................
மலிதானத்தானமிலாவுபேட்சையினில் ... ...
வருவிசேடமுக்கியாநந்தம்... ...... ...... ...*
புகழுமியோகாட்பியாசத்திலைம்பனது........ ...
போனமேற்றுணவிசாநந்தம்... ... ... ......
புணர்பொருணவிற்றும்பிரிடனெனத்தேர்...
பொருதுறவாத்துயாநந்த... ... ... ......*
நிகழுநற்சகம்பாஞ்சரணித்த...............
மென்றுணர்வேவைத்தொய்த ... ... ... ...
நிறைசகமாவாக்கியம்பரீட்சை...............
நெறிமைவித்தியாநந்தமாமே...............*

(இ—ள்.) நிசரூபாநந்தமடைவலக - விளங்காநின்றவாநந்தமேழ்வகைப்படும்—அவற்றுள் - அவ்வெழுவகையிலொன்றாம்— தெரிவைமுன்விடயலாபத்திற்செனிப்பதுவிடயசுகம் - வனிதாதிவிடயப்பிரயோசனத்தினிலுண்டாகுமதுவேவிடயாநந்தமாம்—சுழுத்தியினிற்செறிவதுபிரமவாநந்தம் - சுழுத்தியவத்தையின்கண்ணஞ்ஞானமயமாயமைந்திருப்பதேபிரமவாநந்தமாம்—மகிழுநித்திரைநீத்துணர்ந்து மோராதவாசனைவாசனாநந்தம் - மகிழ்ச்சிகொண்டிருப்பதானசுழுத்தியவத்தைநீங்கிச்சாக்கிரதையறிந்துநிற்குமிடமாகவறியப்

படாதசுழுத்திவாசனையோடுகூடியிருப்பதேவாச
னந்தமாம் — மலிதானுத்தானமிலாவுபேட்சை
யாலில்வருவதேமுக்கியாநந்தம் - மிகுந்திருக்கின்
றபற்றுக்கிடமுமிடமல்லாமையுமானவிருப்பு வெ
றுப்பில்லாதவுபேட்சாபுத்தியிற்றோற்றுவதே முக்
கியாநந்தமாம் — புகழுமியோகாப்பியாசத்தினு
ண்மனதுபோனமேற்றுனனிசாநந்தம் - கீர்த்திக்
கத்தக்கயோகாப்பியாசபலத்தினுண்மனதுமக்கின
மானவிடத்திற்கிடைப்பதேநிசாநந்தமாம் — பு
ணர்பொருணுவிற்றன்பிரியமெனத்தேர்பொழு
துறவாத்துமாநந்தம் - பொருந்தியிருக்கின்றதே
சாதிப்பியஞ்சப்பொருளுக்குட்டானே பிரியவத்
துவெனவறிந்தகாலத்துண்டாகுவதேயாத்துமாந
ந்தமாம் — நிகழுருநாமசயப்பொய்தானித்தமெ
ன்றுணர்வியேயமதமெய்தநிறைசுகம் - தோற்று
கின்றயுருவநாமமாகியவுகமெல்லாம்பொய்க்கா
ட்சியேயத்தியுண்மையன்றுதானேநித்தியபரிபூர
ணவத்துவென்றறியும் விவேகப்பிரயோசனமே நி
றைவாகியவத்துவிதாநந்தமாம் — மாவாக்கியவுப
தோட்சநெறிமைவித்தியாநந்தமாமே - மகாவாக்
கியசன்னிதானமானவபரோட்சஞான வழியிலுணரு
மெய்யுணர்ச்சியே வித்தியாநந்தமாகு மென்றவா
று. — இதனைற்கூறியவாநந்தஞ்சுபாவத்தோடு விரு
த்திகளாற்பேதப்பட்டதாம். இவ்வாநந்தமெண்வ
கைக்குப்பிரமாணம். நவநீதகைவல்லியம் - போ

கத்தில்வருசுகம்விடயசுகநித்திரைப்போதுளதுபிர மசுகமா, மோகத்தனற்கலிற்சுகம்வாசனைச்சுகமு மூப்பிரியமாத்துமசுகமாம், யோகத்திலுளதுமுக் கியசுகமுதாசினமுற்றசுகநிசசுகமதா, யேகத்தை நோக்கலத்துவிசுகம்வாக்கியபெருஞ்சுகஞான சுகமே. எ-ம், [illegible] காண்க. (௬) [illegible] செய்யுளாலறந்த வனையுமவற்றின்பொருளுங்கூறியவாறுணர்க (௨௭)

பேசுகின்றவாவரணமேழுமெலையாதுப்...........
பிறந்துலோகத்துழலுமொன்றுபிறப்பிலண்டமாகவிமை*
பாசமும்மைமேமானநான்கவித்தையைந்தாம்...
பஞ்சுமன்றுஞானப்பாருப்பாற்பமலையமேபூரா.*
மேகமயம்மாயையுமப்பிரமைதன்றுமேவுந்த......
திருமுக்காவரணந்துயரந்தவிர்ந்தா. ...*
ஞசமயமில்லாதகையப்பாற்தாநீ...............
சோகமாத்துமவிதுலவனநல்லாராத்ப்படுமேய

(இ-ள்.) பேசுகின்றவாவரணமேழுமெலையாதும்- கூறியாநிற்கக்கூறப்பட்டவாவரணமேழுமெ ப்படியெனின்— பிறந்துலோகத்தில் - அவற்றினொன்றுமேவ றுகலெவருத்துக்கூறுமிடத்தில்— உலகமொன்றும்- முதலாவரணந்துக்கங்களாம்— பிறப்பிண்டாம்— இரண்டாவதாவரணம்பிறப்பாம்— மும்மலபாசமு ம்மை - பாசத்துளடங்கியகன்மமூன்றாவதாவர ணமாம்— அபிமானநான்கு - யானெனதெனுமபிமா னமேநான்காவதாவரணமாம் — அவித்தையைந்

தாம் - உணர்ச்சியில்லாதவவித்தையேயைந்தாவ
தாவரணமாம்— பன்னுமஞ்ஞானமாறும் - சொ
ல்லப்பட்டமூலாக்கியானமே யாறுவதாவரணமா
ம்—பகர்மாயையேயாம் - இவைகளுக்கெல்லாமு
க்கியகாரணமாகச்சொல்லப்பட்டமாயையே யே
ழாவதாவரணமாம் — ஏகமப்பாயையும்பிரமம
தன்றேவந்தது - இங்ஙனமெழுத்துக்கூறமைந்த
மாலையுமேழுசங்கத்பாத்தியாகியபிடையிருமேலே யு
ண்டாகியதாம்—இதுமுக்கியாவரணம் - இப்பிர
மித்தனாகியதன்மைமேயவற்றிற்குக்கெல்லாமுதன்
மையாகியவாவரணமாம் — இத்துடரத்தவிர்ந்தா
ல் - இவ்வாவரணந்தானுண்டாகுந்துக்கமொழியு
மாயின்—நாசமுமில்லாதவசைவமாம் - தோற்ற
மொழிக்கமில்லாதவேகவலாநந்தப்பிராப்தியுண்டா
கும்—தாந்தேசாகமாத்துமவிற்பனை - ஆவரண
தமைத்தொன்றுவிட்டதாத்துமவித்தாவமென்று— ந
வின்றுஞ்சிப்படிவ - சொல்லுகின்றசுருதிவாக்கிய
ப்படியேயன்றாம்.—என்றிக்கூறியவவித்தைக்கு
மஞ்ஞானத்திற்கும்பேதமெவ்வணமெனின்? அவித்
தையென்பது விவேகமில்லாதவஞ்ஞானமென்று
ம் - அஞ்ஞானமென்பதுமூலாக்கியானமென்று
ம்பொருளுணர்த்துக்கொள்க. இச்செய்யுளாற்ச
த்தாவரணங்கூறியவாறுணர்க ...... ......(உ௪)

இனிக்கொண்டவன்னமயமேதகமதனுள்ளே ... ...
செறிந்துறையும்பிராணனெனத்திகழ்கோசமதற்கு*

ணணிநிற்குஞ்சங்கற்பமனகோசமதில்விஞ்.... ...
ஞானமயகோசமதிலாநந்தகோச.............*
மணிபெறுமிவ்வைந்தினையுமியக்குகின்றவறிவா....
யன்னியனாயிருப்பவனேயாத்துமமெனவுணரத்
துணிவுகொளுங்குலைக்குளபரிபூரணர்நீர்தோன்றுமுத்தி
தான்றானேயென்றுரைத்திரியத்திடுபொருளே......*

(இ—ள்.) திணிகொண்டவன்னமயதேகம் - வலிய
மைந்திருக்கின்றவன்னத்தால்விளைவானதேகமேயெ
ன்னமயகோசமாம் — அதனுள்ளேசெறிந்துறை
யும்பிராணனெனத்தக்கோசம் - அக்கோசத்தி
னுள்ளேயமைந்திருப்பதாய்ப் பிராணவாயுவென்
றுசொல்லும்படி விளங்காநின்றதே பிராணமய
கோசமாம் — அதற்குணணிநிற்குஞ் சங்கற்பம
னகோசம் - அக்கோசத்தினுள்ளேயமைந்திருக்
குஞ்சங்கற்பரூபமே மனோமயகோசமாம் — அ
தில்விஞ்ஞானமயகோசம் - அக்கோசத்தினமை
ந்திருக்கும்புத்திரூபமே விஞ்ஞானமயகோசமா
ம்—அதிலாநந்தகோசம் - அக்கோசத்தினுள்ளே
யமைந்திருக்குமவித்தியாசொரூபமே யாநந்தம
யகோசமாம் — அணிபெறுமிவ்வைந்தினையுமிய
க்குகின்றவறிவாய் - ஒழுங்குபெற்றிருக்கின்றவிப்
பஞ்சகோசங்களையுமதனதனெறிப்படி நிற்கநட
த்துகின்றவறிவுசொரூபமாய் — அன்னியனாயிரு
ப்பவனேயாத்துமமென்ன - அக்கோசங்களுக்கு

விலட்சணனாயிருக்கின்றவனே பிரத்தியேகாத்தும
னென்பதாக—உணரத்துணிவுகொடு - அறிபத்த
க்கவன்னிச்சயார்த்தத்தையுட்கொண்டு—குகைக்
குளமர்பரமுணர்ந்தோன் முத்தி அன்னோனோவெ
ன்று - குகைக்குள்ளேயிருக்கின்றபரமாத்துமா
வையறிந்தவனெவனோவவனே முத்தியடைவனெ
ன்று— தைத்திரியமந்திரஞ்சொல்லுமே - தைத்திரிய
மென்னுமுபநிடதத்தினுள்ளே கூறப்படுமென்ற
வாறு.—இதனுள்ளன்னியனாயிருப்பவனேயாத்து
மவென்றதனால். இப்பஞ்சகோசங்களோடுகூடியுங்
கூடாதிருப்ப வனுக்கேயென்பதாம். இங்ஙனங்கூ
றியபஞ்சகோசத்திற்குமப்பஞ்சகோசத்திற்குவில
ட்சணனாய்ப்பிரத்தியேகாத்துமனிருப்பதற்கும் பி
ரமாணம். உபநிடதம் - அன்னமயம்பிராணமய
மனோமயம்விஞ்ஞானமயமாநந்தமயமைந்திலே
யன்னமயமடைந்தான், பின்னுடல்கன்மேந்திரியத்திற்
பிராணனுங்கூடிற்பிராணமயமனங்கூடிற் பிறங்கு
மனோமயமா, நன்னிலைஞானேந்திரியமும்புத்தி
யுங்கூடிடில் விஞ்ஞானமயமாமவித்தையாநந்தம
யமே, சொன்னவைந்துந்தானெனருதான்மிய
மீதெல்லாந்தோய்வறநின்றெனதெனல்காண்சுத்த
வனுபவமே. என்பதனாலும். மெய்ஞ்ஞானவிள
க்கம் - நானுவண்ணமொருகோவைநண்ணுங் கா
லேயங்கங்கே, நானுவண்ணமொருநூலேநண்ணு
வதுபோற்கோசவுரு, நானுவிதமாகையிற்பரமு

நானாவிதப்போனித்துநின்று, நானாவிதவைங்கோ சதங்கடந்தன்னாற்போலவின்னாரும். எப்படியெ னும். வித்துநாயிசானடைகம் - அவிவேடை ருடலகு ரூமேந்திரியமுப்பிரானைவுமப்பிரானனேசை, ந ன்னயனாமேனத்திரியமுமனமுடமேனடயயாய்க்கு ஞானமேகாச, முன்னுயிந்திரியமுமடித்புடமாரந்தம யடவித்தைபுறைபொற்கோச, மேன்னுமைவித் தகருத்தன்னியதித்திகிமமர்த்தி யிலைக்காண்மீமேர. என்பதனுறுங்கானை. இச்செய்யுளாற்பஞ்சகோ சவிலக்கணமுமாத்திரயாத்துமா வீருதருமுவி கூறியவாறுணர்க.............................. (டை)

ஒங்கிநிற்கும்போகபோக்கியவிரியாதனவி ... ....
னுடன்கலையசுரூபத் ... *
பாங்குபெறும்பகுதிகளைப்பிரிதானகு. ...
பகுமொனமிறவாமைமாந்தபுமோனமுமையுமை *
இங்கருமார்க்கத்துணர்ந்துகருவியொயாபிகரணைச...
சிமிழ்ப்பதன்னாமெனப்புயப்பந்தந்திர்ந்தவமே*
தாங்கிநின்றமாயாகன்மங்களைநீத்துக.... ....
சுத்தாசாமானியமாய்ச்சுவனமறமுமுடிவே...*

(இ—ள்.) ஒங்கிநிற்கும்போகபோக்கியவிரியாதனை வினுடன் - மிருந்துருக்கின்றபோகவத்துக் களின் போக்கியப்பரப்பாய்த்தோற்றுகின்றசாக்கிரமவத் தையுடனே—கனவு - சொற்பனவத்தையும்—சு ழுத்தி - மூடமாகியசுழுத்தியவத்தையும்—ஒன்று

மொப்பிறந்ததுரியம் - ஒருதன்மையினுமுவ
மைசொல்லக்கூடாதவிம்மூன்றவத்தையினையுங்க
டந்ததுரியநிலையுமாகிய ---- பாங்குபெறுமிவற்றி
னுறுகரணம் - தகுதியமைந்தவின்னுங்கிடத்தும்
பொருந்தியிருக்கின்ற கரணவகைகளியாவையெ
னில்— ஈரேழ் - செய்கருவியைந்துமறிகருவியை
ந்துமிச்சைக்கருவி நான்குமாகிய பதினாலும் —
நான்கு - செய்கருவியுமறிகருவியு நீங்கி நிற்கச்
சேடமாய்நின்றவிச்சைக்கருவி நான்கும் — பக
ருமொன்று - கூறுகின்றவக்கருவியினு மூன்று
மொழியச் சேடமாய் நின்ற வாயுசதத்துவத்தில்
வாயுவம்சமானவேககருவியும் — எலாமொழிந்
தபதம் - இக்கருவியெல்லா மொழிந்த பதவியு
ம் —என்னுமிவற்றை - என்றுகூறப்படுகின்றநினை
ப்புமறப்புமிவ்விரண்டல்லாதநிலையுமாகிய விவைக
ளை— தீங்கறுமார்க்கத்துணர்ந்து - செவ்வையான
வழியாலறிந்து— கருவியெம்பெகரணச்சிமிழ்ப்பத
னைநானெனனும்பந்தந்தீர்ந்து - கருவிபத்துங்கர
ணநான்குமாகிய பந்திப்பையத்தியாசத்தானென
ன்றபிமானிக்குங்கட்டுங்குலைந்து— அவமேதாங்கி
நின்றமாயாகன்மங்களெலா நீத்து - வீறுகைத்தன்
மேற்சுமத்திக்கொண்டிருந்தமாயைத் தோற்றமா
னவினைகளெல்லா ந்தனதல்லவென்றொழித்து —
சத்தாசாமானியமாய்ச்சலனமறன்முடிவே - சல
னமற்றபாவனையாற்சத்தாசாமானியமாய்விளங்கு

வதேவேதாந்தமுடிவென்றவாறு. — இதனுளவத்தாத்திரயங்களையுங்கடந்த துரியமேசலனமற்றபாவனையாய்ச்சுத்தாசாமானியமாய்விளங்குமென்று கூறியதாம். இங்ஙனமவத்தாத்திரயங்களிற்கருவிகணிற்றற்குஞ்சாட்சியாகிய துரியத்திற் கருவிகணில்லாமைக்கும்பிரமாணம். மெய்ஞ்ஞானவிளக்கம் - புரியுந்தொழிலாற்பலநாமம்பொருந்திப்போகபோக்கியத்தின், விரியுநனவுகனவினுடன்மேவுஞ்சுழுத்தி துரியமெய்துந், தெரியினிவற்றிற்குறுங்கரணஞ்செப்பிலீரேழ்நான்கோடொன், றுரியவிவைகளொன்றுமிலாவொழிவு மென்பருணர்வுற்றோர். என்பதனாற்காண்க. சலனமற்றபாவனைக்குப்பிரமாணம். ஞானவாசிட்டம் - அலர்கசக்குமுன்னிமைக்குமுன்னங்கரமகற்றுதலெவ்விதாகும், பலவுளைப்பதென்னின்பமாயேகமாய்ப் பரமசித்தேயாகிக், குலவுசுத்தமாய்விண்ணினுநுண்ணிதாங்குறைவிலாப்பொருணிற்குஞ், சலனமற்றபாவனைசெய்துமிகுமுபசாந்தனையிடர்தீர்வாய். என்பதனாற்காண்க. சுத்தாசாமானியத்திற்குப்பிரமாணம். ஞானவாசிட்டம் - உன்னுதெதிர்காண்பனவொன்றுமொழியாதியாமையுறுப்பென்னத், தன்னுற்றன்பாலடங்குமெனிற்சுத்தாசாமானியமதுவே, முன்னுமுடல்சேர் முத்தருடலிலதாமுத்தரிருவர்குணு, மெந்நாளினுஞ்சேர்பெருங்கண்ணறிதன்பேர் துரியாதீதபதம், என்பதனாற்காண்க. இச்செய்

யுளாற்கருவிகளோடுகூடியவவத்தைகளிலக்கணமு
மக்கருவிகளொழிந்ததுரியவிலக்கணமுமத்துரிய
மே சலனமற்ற சத்தாசாமானியமாகுமென்பதுங்
கூறியவாறுணர்க..............................(௫௰)

புணர்தருபயன்வேண்டாக்கருமத்தாற் ..........
போந்திடுமானதசுத்தி............. ........ ...*
யிணைதருமதனாற்போதமாமதனா... ............
லிலக்கறுபிரமநானென்ன................ ...*
வுணர்தருதுணிவுண்டாமதனாலே.................
யுலகமாமாயையிற்றன்னை........ .........*
யணைதருதுளக்கமின்றிநோக்கிடுவ...............
னத்தொய்ததொய்தமுமற்றே...............*

(இ—ள்.) புணர்தருபயன்வேண்டாக் கருமத்தாற் போந்திடுமானதசுத்தி - முத்திவிருப்பத்துக்குத் தகுதியானநிட்காமியகருமத்தினாலே மனோசுத்தி யுண்டாகும்—இணைதருமதனாற்போதமாம் - இசைவாகியவம்மனோசுத்தியினான் மெய்யுணர்ச்சியுண்டாகும் — அதனாலிலக்கறுபிரமநானென்னவுணர்தருதுணிவுண்டாம் - அம்மெய்யுணர்ச்சியினாலேயிலக்குப்படாதபிரமசொரூபநாமேயென்றறியத்தக்கதிடமுண்டாகும்— அதனாலேயுலகமாமாயையிற்றன்னையணைதருதுளக்க மின்றிநோக்கிடுவன் - அத்திடத்தினாலேசகத்தாகியமாயைத்தோற்றத்தின்கண்ணேகூடத்தனாகியதன்னைப் பொருந்து

இன்றசலன சத்திக்குட்படாததாயிருக்குமுன்மை
நோக்கத்தாற்பார்த்திருப்பன்—அத்தொய்ததொ
ய்தமுமற்றே ஏகமுமிரண்டுமாகியவிருவகைப்
பாவனையுமொழிந்தென்றவாறு. — இருவகைப்
பாவனையுமொழிந்து துளக்கமின்றி நோக்குவனெ
னக்கூட்டுக. இதனுட்பயன்வேண்டாக்கருமத்தா
ன்மனசுத்தியுண்டாயதனுன்மெய்யுணர்ச்சியுண்
டாயதனுற்பிரமநானென்னவுணரத்தக்க துணிவு
ண்டாயுமிதற்றன்னைத் துளக்கமின்றிக் காண்டற்கு
ப்பிரமாணம். மெய்ஞ்ஞானவிளக்கம் ஆற்று
ப்பயன்வேண்டாக்கருமமற்றக்கரணசுத்திதரும்,
போற்றுஞ் சுத்திதரும்போதம் போதம் பிரமநா
னென்னு. மூற்றந்தருநானுநித்தலுமே யுயர்வா
ன்மதி நீர்த்துளக்கமெனத். தோற்றந்தருமாயை
யிற்றன்னைத் துளக்கமின்றிக்காண்குவனால். என்ப
தனுற்காண்க. அத்தொய்ததொய்தமுமற்றென்ப
தற்குப்பிரமாணம். ஒழிவிலொடுக்கம் - என்றனை
யென்றனையென்றனை யேகமிரண், டென்றுமை
ற்சும்மாவிருவென்று, சொன்னன், திருஞானச
ம்பந்தன்சீகாழிநாட, னருளாளன் ஞானவிநோ
தன். என்பதனுற்காண்க. இச்செய்யுளானிட்கா
மியகருமமுன்னிலையின் மனசுத்தியுமம்மனசுத்
திமுன்னிலையின் மெய்யுணர்ச்சியும் மெய்யுணர்ச்
சிமுன்னிலையிற்பிரமநானென்னுந் திடமுந்திட
முன்னிலையிலுலகமாயையிற் றன்னையத்தொய்த

தொய்தமின்றியசைவறநோக்கலுமுண்டாமென்று கூறியவாறுணர்க .............. ............ (ஙக)

இயம்புமிப்பொருளையிருக்கறிவென்ன..........
விசைத்திடுமேகாகமென்று..................*
நயம்பெறமொழியுஞ்சாமமாம்வேத..............
நவின்றிடுந்தத்தொமசியென்று..............*
வயஞ்செறிமுடிவாமதர்வணமயமான்..........
மாவெனவகுத்திடும்வழியே.................*
சயங்கொளுங்குருமுன்னிலையுணர்ந்துணர்வுந்.....
தானுந்தீர்ந்திடல்சகசமதே... ........ ... ...*

(இ—ள்.) இயம்புமிப்பொருளையிருக்கறிவென்ன விசைத்திடும் - இங்ஙனமெடுத்துக்கூறு மிவ்வத்துவையிருக்குவேதமானதறிவுருபமென்றுசொல்லானிற்கும் — ஏகாகமென்று நயம்பெறமொழியும்- யசுர்வேதமானதுசாட்சியாகிய நானென்று நன்மையடையும்படிகூறுநிற்கும்— சாமமாம்வேத நவின்றிடுந்தத்தொமசியென்று - சாமமென்னும் வேதமானதுசெகத்திற்கு விலட்சணமாகியவந்தப் பிரமமேகூடத்ததாகிய நீயாகுயென்று மொழியானிற்கும்— வயஞ்செறிமுடிவாமதர்வணமயமான் மாவெனவகுத்திடும் - வலியமைந்தமுடிவாகியவதர்வணவேதமானதெல்லாமாகியவாத்துமசொரூபமென்றுபகலானிற்கும்—வழியேசயங்கொளுங் குருமுன்னிலையுணர்ந்து - இந்தநான்குவாக்கியமா

ர்க்கமாவஞ்ஞானவெற்றியமைந்தவாசாரியர் முன்னிலையில்வழிபட்டறிந்து— உணர்வுந்தானுந்தீர்ந்திடல்சகசமதே - சகத்தோற்றவுணர்ச்சியுமவ்வுணர்ச்சிக்கேதுவாகியநானென்னுமகம்பாவமுமொழிந்திருத்தலேசகசசமாதியாமென்றவாறு.—இதனான்மகாவாக்கியத்தைக்குருமுன்னிலையில் வழிபட்டறிந்து முத்தியடையவேண்டுமென்பதாம். இங்ஙனங்கூறியநான்குவாக்கியத்திற்கும்பிரமாணம். அத்தொய்தானுபவம் - பிரமாதியுயிரொல்லா மறிவொன்றேசீவனென்றும்பிரமமென்றும், விரவுமதாற்பார்வை முதலான வறிவென்றிருக்கு வேதஞ்சொல்லுந், திரமதிக்குஞ்சாட்சியாய்நானென்று தான்விளங்குஞ்சீவான்மாவே, வரமுதவுபூரணமாம்பிரமமென்றே யெசுர்வேதம் வழுத்துந்தானே. திருட்டிக்கு முன்பினிரண்டிலாமலொன்றாயிருந்தசத்தேதினந்தேகாதி,விருத்திக்குஞ்சாட்சியாகிய நீயென்றேசாமவேதஞ்சொல்லு, மருப்பில்லாவபரோட்சப்பொருளிதென்றுஞ் செகசாட்சியாத்மாவென்றும், பொருத்தகிலவிளக்கமிதே பிரமமென்றுமதருவணம்புகலுந்தானே. என்பனவாற்காண்க. குருமுன்னிலையுணர்ந்தென்பதற்குப்பிரமாணம். ஒழிவிலொடுக்கம் - தன்னிழப்பையென்ன கற்றுச்சாதிப்பான்சற்குருவா, மன்னுபெருஞ் சியமதயானே, தன்னடைமேற், சொற்பனத்தேதோன்றித்துடிப்பற்றும்மேவலமாய், நிற்பதுபோற்பா

ரானெனின். என்பதனாலும். கருணையாநந்த சுவாமிகள்பாடல் - எத்தனை நூல்கற்றாலுமெண்ணில்சித்திபெற்றாலுஞ், சத்திநிபாதத்தினிலை சார்ந்தாலு, முத்தியிலை, பேசாவனுபூதிபெற்றிருந்தவாறிருக்கு, மாசான்கழலிணையாதார்க்கு. என்பதனாலுங்காண்க. உணர்வுந்தானுந்தீர்ந்திடல்சகசமென்பதற்குப்பிரமாணம். சகசபதிகம் - பொன்னிலேபூணும்புவியினிற்கடமும்புணரியிற்றரங்கமும் போலே, யென்னிலேதோன்றியவழியுமைம்பூதமெச்சராசரங்களு மெனக்கு, முன்னிலைப் பின்னுமொன்றிலையானேமுடிவிலாவரியமோனமெனத், தன்னிலேதானாய்த்தனையுணர்வதும்போய்த்தானிறந்திருப்பதேசகசமாதி. என்பதனாற்காண்க. இச்செய்யுளான்மகாவாக்கியப்பொருளுமப்பொருளைக் குருமுன்னிலையிற்கேட்டுக் கதியடைய வேண்டுமென்பதுங்கூறியவாறுணர்க................(௩௨)

ஞானசம்பந்தனெனுங்குயன்றனே ..............
நற்கருணாநந்தநாம..........................*
ஞானசம்பந்ததேசிகனென்ன ......................
நானிலத்துருக்கொடுபோந்து....................*
ஞானசம்பந்தனெனும்பெயரெனக்கு...............
நல்கியென்னுவிருந்திந்நான்.......................*
ஞானசம்பந்தமுறப்புனைவித்தோ.................
னல்லருள்வாழிநீடூழி..............................*

(இ—ள்.) ஞானசம்பந்தனெனுங்குகன்றனை
சீகாழியென்னுந்திருப்பதியிற்றிருவவதாரம்பண்
ணியதிருஞானசம்பந்தப்பிள்ளையாரென்னுமுரு
கக்கடவுளே — நற்கருணைநந்தநாமஞானசம்பந்த
தேசிகனென்னநானிலத்துருக்கொடுபோந்து - ந
ன்மையமைந்த கருணையாநந்தனென்னுந் திருப்
பெயரையுடையமெய்ஞ்ஞானசம்பந்தப்பட்ட வா
சாரியனென்றுசொல்லும்படி யிவ்வுலகத்தின்கட்
டிருவுருக்கொண்டெழுந்தருளி— ஞானசம்பந்த
னெனும்பெயரெனக்குநல்கி - திருஞானசம்பந்
தனென்னும்பெயரைத்தகுதியில்லாதவெனக்குந்
தந்தருளி— என்றுவிருந்திந்நூன் ஞானசம்பந்த
முறப்புனைவித்தோன் - எனதுநாவிற்கண்ணெழு
ந்தருளியிருந்திந்தநூலைமெய்ஞ்ஞானசம்பந்தப்
படும்படியலங்கரித்தருளிச்செய்த ஞானசாரியர
து— நல்லருள்வாழிநீடூழி - மங்கலமாகியதிருவரு
ணீடூழிகாலம்வாழ்க' - வென்றவாறு. — இதனு
ளென்றுவிருந்திந்நூன் ஞானசம்பந்தமுறப்புனை
வித்தோனெனவே தற்செயலன்றிக்கூறிய தெம்ப
தாம். இச்செய்யுளாலிட்டதெய்வமேகுருவாய்வந்
து நூல்செய்யுப்படியருளியதெனவவ்வருளைவாழ்
த்தியவாறுணர்க.................................(௱)

மெய்ஞ்ஞானசாரமுற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

# வேதாந்தப் பிரகாசிகை.

வேதமொ டாகம மெய்யா மிறைவனூ
லோதும் பொதுவுஞ் சிறப்பு மென்றுள்ளன
நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்
பேதமதென்பர் பெரியோர்க் கபேதமே" என்றமையின்

அநாதிநித்தியமாகிய சிவஞ் சுத்தமாயையைச் சேர்ந்து ஈசுரனென்றும், அநாதிநித்தியமாகிய ஆத்மா ராகம் வித்தை கலையைப்பொருந்தி இச்சாஞானக்கிரியா சத்தியாய்ப்பட்டு [illegible]னென்றும், சூரியன்போன்ற சிவத்துடன் கண்போன்ற ஆத்மா கலந்து ஒன்றாய் நிற்பதே அத்துவிதமென்றும் ஆகமங் கூறியபடியே - வேதமும் சர்வசாக்ஷியாகிய பிரமம் மாயையிற் றோய்ந்து ஈசுரனென்றும், அப்பதி கூறப்படாத சீவசாக்ஷியான கூடஸ்தன் அந்தக்கரணத்திற் றோய்ந்து சீவனென்றும், தற்பத சுத்தார்த்தமான சர்வசாக்ஷியோடு தொம்பத சுத்தார்த்தமான கூடஸ்தன் கலந்து ஒன்றாய் நிற்பதே அத்துவிதமென்றும், கூறுகின்றது. அத்துவிதமென்று ஆகமங்கூறியதற்குப்பிரமாணம் சிவஞானபோதம்.

பண்ணையு மோசையும் போலப் பழமதுவு
மெண்ணுஞ் சுவையும் போலெங்குமா-மண்ணல்
ளத்துவிதமாத லருமறைக ளொன்றென்னா
தத்துவிதமென் றறையுமாங்கு

இவ்வுண்மையை யறியாது மாயாவாதி கடாகாசமான கூடஸ்தனுக்குக் கட்டான அவித்தையை அந்தக்கரண பிரதி பிம்பமான சீவன் மேலேற்றிக் கூறுவ

தும், பிரமப்பிரதி பிம்பம் ஈசுரனென்றும், கூடஸ்தப்
பிரதிபிம்பம் சீவனென்றும், வேறுபிரித்தோதினமை
யானும், சர்வசாக்ஷி பிரமமென்றும் சீவசாக்ஷி கூடஸ்த
னென்றும் வேறுபிரித்தோதினமையானும் "அகம் பி
ரமாஸ்மி" என்னுந் தன்மைவாக்கியத்தில் - அகம் - நா
னென்றும், பிரமம் - அது என்றும் வேறுபிரித்தோதி
னமையானும், இதுபோல தத்துவமசியென்னு முன்
னிலை வாக்கியத்தும் அதுவாகிய பிரமமொன்றென்
றும் நீயாகிய கூடஸ்தன் ஒன்றென்றும் இருபொருள்
படுதலானும் இதுபோல அயம் ஆத்மா பிரமமென்னும்
படர்க்கை வாக்கியத்தும் அந்த ஆத்மா ஒருபொருள்
பிரமம் ஒருபொருளெனப் பிரித்தோதினமையானும்,
அத்துவித மென்னும் வாக்கியத்திற்கு ஒன்றெனப் பொ
ருள் கொண்டதும் மிகவுங் குற்றம்.

ஆனால் கடாகாயமாகக்கூடஸ்தனையும் மகாகாயமா
கப் பிரமத்தையுங் கூறியது உமக்குச்சம்மதமோ வெ
னின், அது சம்மதமன்று - பின்னையெப்படி யெனில்
பூதாகாயம் போலுங் கூடஸ்தன் அதனுள் வியாபித்தி
ருக்கிற ஞானாகாசமே பிரமம். இக்கருத்தைப்பற்றியே
கூடஸ்தனைச் சீவசாக்ஷியென்றும் பிரமத்தைச் சர்வசா
க்ஷியென்றுங் கூறியதும் பரமாத்வாவை யுயிர்க்குயிரெ
னக் கூறியது மென்க.

சத்துச் சித்தானந்தம் பிரமத்துக்கும் கூடஸ்தனு
க்கு மொன்றென்றது உமக்குச் சரியோவெனில், சரி
யன்று. அஃதெங்ஙனமெனில் திரிகாலத்துமுள்ள மாயை
க்குஞ் சத்து இலக்ஷணங்கூறவேண்டுதலானும், கிஞ்சிக்
கியனை கூடஸ்தனைச் சர்வக்கிய னெனக்கூற வேண்டு
தலானுங் கூடஸ்தன் ஆனந்தனாயின் எக்காலத்துந் து
ன்பமடையா திருக்கவேண்டும் - அப்படி யில்லாமையா
னுஞ் சத்துச்சித்தானந்த லக்ஷணத்திற்குப் பொருள்
கூறியது சரியன்று பின்னை எப்படியெனில் அசத்

நல்லாதது - சத்து - சர்வக்கியமுடையது - சித்து - இவ்விரண்டுமின்றியுள்ளது சத சத்து. அஃதெப்படியெனில் சத்தென்பது - பிரமம் - அசத்தென்பது-மாயை - சத சத்தென்பது கூடஸ்தன் இக்கூடஸ்தன் பிரமத்தோடு சையோகப்பட்டபோது தன்னிடத்திலுண்டாகிய சுகமே யானந்தம் - இக்கருத்துப்பற்றியேசுவானுபவமென்று சுருதி கூறும்.

அறிவு ஒன்றாயிருக்க சர்வக்கியனென்றும்-கிஞ்சிக்கியனென்றும் தாரதம்மியமாகக் கூறியதென்னையெனில் தத்துவங்களுள் புத்தி தத்துவத்திற்கு மாத்திரம் அறிவுண்டாயிருக்கும். அப்புத்தி தத்துவத்தினும் கூடஸ்தனுக்கு அறிவு மிகுந்திருக்கும. அக்கூடஸ்தனுக்கு மேம் பரமாத்மாவுக்கு அறிவு மிகுந்திருக்குமென்றறிவாயாக.

வேதாந்தப் போலியாகிய ஓமாயாவாதியே? வேதாந்தியாகிய நமக்கு சிவநதுவிசப்பிராமணருள் ஆசிரியரொன்றும், வைணவர்க்கு எழுபத்திரண்டு சிம்மாசனாதிபதிகளாகிய பிராமணரோ ஆசிரியரொன்றும் கண்டிருக்கின்றனம். உனக்குமாத்திரமாசிரியரைக்காணகின்றிலம். ஈதென்ன? குட்டிச்சுவற்றில் முட்டிக்கொள்ளவெள்ளெழுத்தா. ஸ்ரீமத்சங்கராசாரிய சுவாமிகளே ஆசிரியரன்றோவெனின் - அன்று. அவர்க்குஸ்மார்த்த பிராமணரன்றி மற்றைய சாதியாரில் சீடரில்லையே! உன்னிடனில் அவர்க்குள்ள கெர்ப்பாதான முதலிய சமஸ்காரநாற்பதில் உமக்கு ஒன்றேனு மில்லையே! எமக்குச்சந்நியாசத்வமுதலிய சற்காரியமுள்ளனவே! எத்தாம் குறையெனின் - அதுதான்றோன்றித் தம்பிரான்கதைபோலும். ஐயோ உமக்கு ஆசாரியபரம்பரையில்லாமையால் சைவவைஷ்ணவ ஆசாரியபரம்பரையையடுத்து தீக்ஷைபெற்று அதற்கேற்கநடந்து கதியடைவீராக- ஆயின் வைஷ்ணவபரம்பரையைப்பற்றி நடக்கலாமோ

வெனின் அதுகூடாது. ஏனெனின்அதத்ததனுவாயி ருக்கக்கூடாதென்னுஞ் சுருதிவசனத்திற்கு - தப்தம் என்பது - தபசென்றபொரு ளறியாது - தப்தம் தகித்தலெனப்பொருள் கொண்டு! குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்டாற்போல, துன்பத்தைதவிடநினைத்து உடலைச் சுட்டுக்கொண்டு துன்பப் படுதலானும் அப்படித் துன்பப்படுதற்குச் சகியாமையால் சில வைஷ்ணவர்கள் சங்குசக்கரத்தை வெந்நீரில்போட்டு அந்நீரைக் கருப்பததிலிருக்கும்போதே அக்கருதினைசுத பெறுமாறுதாய்வெப்பத்தோடு குடித்தலானும், அச்சுடுநீர்குடிப்பதும் வருத்தமென்று சந்தனத்தில் சங்கு சக்கரத்தை ஒத்தி அணிந்தும் பலவகைப்படுதலானும், அன்றியும் விஷ்ணு வென்னும் பதத்திற்கு - வியாபகனென்று பொருள்கொண்டவர் அவ்விஷ்ணு சரீரியாய் அப்பிராகிர்த வைகுந்தமென்னு மோரிடத்திருப்ப னென்பது கூடாது. சூரியனோரிடத்திலிருந்துதன் கிரணங்களினால் வியாபகமாவதுபோல இருப்பனெனில், அச்சூரியனுடைய கிரணத்தில் சடாயுசம்பாதியென்னுமிருவர் பறந்து ஒருவற்குச் சிறகுபோயும் ஒருவற்குப்போகாமலும் இருந்தமையால் அதுவிபுத்துவ லக்ஷணமன்று. அன்றியும்- இராமாயணத்தில்.

> நிலமகண்முகமோ திலகமோகண்ணே நிறைநெடுமங்
> கலநாணே, இலகுபூண் முலைமேலாரமோ வுயிரினிரு
> க்கையோ திருமகட்கினிய, மலர் கொலோமா யோன்
> மார்பினன் மணிகள் வைத்த பொற்பெட்டி யோவா
> னே, ருலகின்மேலுலகோ வூழியினிறுதியுறையுளோ
> யாதெனவுரைப்பாம்.

எனக்கல்வியிற்பெரியகம்பரும்விஷ்ணுமனையாளாகிய நிலமடந்தைக் கயோத்தியே திலதமென்றுகூறியிருக்க அப்படியே திலதமிடாமல் திருமண்ணை மூன்றுபிரிவாய் நெற்றிமுதலியவிடத்தி லிடுகிறார்கள் அப்படி மூன்று பிரிவாய் இடுவதென்னவென்றால். இரண்டுபிரிவு சுவாமிதிருவடியென்றும் மற்றொன்றை சீதாபிராட்டி யென்றும்

சொல்லுகிறார்கள். அப்படிச்சுவாமியுமிடுகிறாரோ அவர் யார் திருவடியையபிடுகிறாரென்றால் மௌனமாயிருக்கிறார் கள். அன்றியும் விஷ்ணுவிற்கே பரத்துவங்கூறும்சிலஸ் மார்த்தரும விஷ்ணுவேயோனியும் சிவமே பீஜமுமாகக் கூறும் மந்திரஞ்சொல்லிக் கர்ப்பாதான ஸமஸ்காரஞ் செய்து தூற்றுகிறார்கள். அதற்கேற்ப அவ்விஷ்ணுவும் ஸ்ரீரங்கமுதலிய தலங்களில் வலதுகை கீழாகவைத்து யோக நித்திரை செய்கிறார். இதற்குப் பிரமாணம்.

கோவிந்தன் பெண்பாலே யல்லாமற் கூறுங்காற்
றுவில் புருடோத்த மனல்லன்-பூவையர்போல்
சீரங்கமாதி திருத்தலந் தோறும்வலக்கை
சாரவைத்துத் தூங்குதலாற்றான்.

அன்றியும் இராமன் பூசித்த இலிங்கம் இராமலிங் கமென்றும், இராமனுக்கு நாதன் புரம் இராமநாதபுர மென்றும், திருமால்பேறு பெற்றமையால் திருமாற்பே றென்றும் கச்சபமாக விருந்து பூசித்தமையால் கச்ச பேசரென்றும் கிருஷ்ணன் சாம்பமூர்த்தியைக்குறித்து த்தவஞ்செய்து புத்திரனைப்பெற்று சாம்பனென்று பே ரிட்டானென்றும் திருவயிந்திரபுரத்துப் பெருமாள்சிர சில் சடையும் நெற்றியிற் கண்ணும் புயங் களில்சங்குச க்கரமும் புஷ்டத்தில் பத்மாசனமுமாகதிரிமூர்த்தி சொ ரூபங் காட்டியதையும் சாகை, சிவன், பரானா, விஷ்ணு. வேர், பிரமாவென்று அரசு கூறப்படுவதையும் சங்கர நாராயணபுரமென்பதையுங்கேட்டு நாணிகச்சப சம்பந் தமான கச்சியென்னும் பிரசித்தப்பெயரை நெருப்பைத் துணியான் மறைப்பதுபோல் பெருமாள்கோயிலென்று கூறியும், ஔபாசனுக்கினி நீறிட்டுக்கொண்டுபோசனஞ் செய்து வருபவர்.

கரியமேனி மிசைவெளிய நீறு சிறிதேயிடும் [றன்னை
பெரியகோலத் தடங்கண்ணன் விண்ணோர்பெருமான்
உரியசொல்லாலிசைமாலைக ளேத்தியுள்ளப்பெற்றேற்
கரியதுண்டோ வெனக்கின்று தொட்டுமினியென்றுமே.

என்று விஷ்ணு நீறிட் டிருக்குமித் திருவாய் மொழிக்குத்திருநீறென்பது திருமண்ணே என்று பொ

ருள் கூறியும், காரண சூக்ஷ்ம, தூலதேக வபிமானிகளாகிய ருத்திரன் - விஷ்ணு - பிரமா இவர்கட்கு முறையே சத்துவ ரஜஸ்தமோகுணம் உரித்தென்று உபநிடதமுரைத்திருக்க சத்துவகுணம் விஷ்ணுவிற்கே உரியதென்றும் இவ்வாறின்னும் பல விசேஷங்களையுங் கூறுதலால் அம்மார்க்கத்தைவிட்டு, சௌசமும் நீர் தெரியாதவராகையால் முன்னே சௌசவிதியைத் தெரிந்துகொண்டு பின்னே வேதாந்த மார்க்கமாகிய சைவத்தில்வந்துய்வீராக.

சௌசவிதியாவது- மணல்-உவர்மண்-நீர்க்குள் இருக்கும் மண்-புற்றுமண் சுவர்மண் சக்கான்மண் இவைகளை நீக்கி கார்காலமல்லாத காலத்து- புனிதத்தலத்து ஒட்டுவிரற் கீழுள்ள மண்ணை - எடுத்து வைத்துக் கொண்டு (அம்மண் நான்குமாதத்திற்குத் தானுதவும்) சூரிய உதயத்திற்கு ஐந்து நாழிகைக்குமுன் னெழுந்து, கூடியமட்டும் சரீர சுத்திசெய்து விபூதி தரித்துக் கொண்டு நாமே பிரமம் நமக்குமேற் றெய்வமில்லை யென்னுங் குசமசக்குப் புத்தியைவிட்டு, இதையத்தி லுருத்திரமூர்த்தியைத் தியானித்துத் தோத்திரஞ்செய்து மேற் கூறிய மண்ணிற் றென்னங்கா யளவு மண்ணும், தந் தகாஷ்டமு மெடுத்துக்கொண்டு வெளியேபுறப்பட்டு ஈசானதிக்கொழித்து மற்றைய திக்குகளிலும் ஆலயத்திற் கப்பால் நூறுதண்டத்திற் கப்புறம்போய் சிரசை வஸ்திரத்தால் மூடிகொண்டு விளைநிலம் - ஆறுகுளம் வீதி பசுமந்தை அறுகம்புற்பூமி - குழி - மேடு - காவருகு அசுத்த நிலம் செந்தடுத்த நிலம் ஈமம் இவைகளில் மல சலம் விடுத்தால் சர்வ சங்கார காலம் வரையில் நரகமடைவா ராதலால்; அவையொழித்து மனிதரில்லாதவிடத்தில் திரணமிட்டு அங்குள்ள தேவர்முதலானோரை விலகும்படி பிரார்த்தித்துக்கொண்டு பகலில் வடக்கு முகமாகவும் இரவில் தெற்குமுகமாகவும் இருந்து திசை தபசி - பசு பருதி ஆண்குறி கஷ்ட மிவைகளைப்

பாராது நாசி நுனியைப் பார்த்துக்கொண்டு வாய் நீரு
மிழாது மல சலம் விடுத்து ஓமத்துக்காகாத கொப்பு
மண்ணாங்கட்டி செங்கல் இவைகளால் குதத்தைத்து
டைத்து இலிங்கத்தை இடக்கையிற்பிடித்துக்கொண்டு
தீர்த்தமல்லாத நீர்க்கரையிற் சென்று மேற் கூறிய மண்
ணை வலப்புறத்தில்வைத்துக்கொண்டு ஒருசாணிருக்கிப்
பாலிருந்துநெல்லிக்காயளவுமண்ணாற்குய்யத்தை ஒருத
ரமுங்குதத்தை ஐந்துதரமும் சுத்திசெய்து அப்படி
சுத்திசெய்யுங்கால் இடதுகையை யிடையிடையிலொரு
தரமும்முடிவிற் பத்துதரமும் சுத்திசெய்து பின்பு இரு
கையுஞ்சேர்த்து எழுதரம் சுத்திசெய்து, முழங்கால்மு
ழங்கைகளை ஒருதர மண் பூசி நீராற் சுத்திசெய்து பின்
டத்தை - துடைத்து மற்றோர் துறையை யடைந்து வா
ய் கண் நாசி செவி கை - கால்களைச் சுத்திசெய்து இட
துகாலைத்தண்ணீரில் வைத்துக்கொண்டு எட்டுத்தரமா
ய்கொப்பளித்து இடப்புறக்கரையிலுமிழ்ந்து புறம்பே
வந்து தலைக்கட்டு பராக்கு நகைப்பின்றி முழங்கால்க
ளிற் கைகள் பொருந்தக் கிழக்கு முகமாய்க் குக்குடா
சனத் திருந்து நானாநீர் மொக்குள்நீர் உவர்நீர் தூய்
மையுறு நீர் வெந்நீர் இவைகளை மாற்றி, உளுந்தமிழ்ந்
து நீர்க்குமேல் ஆசமித்தால் சுராபானத்துக்கொப்பாம்
ஆதலின் அவ்வுளுந்தமிழ்ந்து நீரான் மந்திரமின்றி ஆச
மித்து. ஆல் - அரசு நெல்லி ஆவாரை பான்மரம் பட
ட மரம் கோட்டை முருங்கை பலாசு கறிவிலி நீர்வ
ஞ்சி நமை வெளிறு மரம் பேய்மரம் வைமரம் வேம்
பு - புளிய மரம் செங்கல் மணல் சாம்பல் இவைகளால்
சுத்திசெய்தால் தவம் போம் ஆதலால் - மா - ஆத்தி
விளா - மூங்கில் பூலா - மருது நாவல் கடம்பு சங்கு
இறலி நாயுருவி அசோகு சண்பகம் இவைகளிற் றோல்
உரிந்ததும் கணுவுங் கோணலுமில்லாததாய் அங்குட்
ட விரற் பருமமும் பன்னிரண்டு அங்குல நீளமும் உள்
ள கொம்பினை முன்னே வலதுபுறமாகத் துடங்கி மாசு

போமளவும் சூரியனுதிக்கற்குமுன் நாய் நீசர் என்பு-ஆ
முகெஷ்டம் பூத்தஸ்திரி பன்றி இவைகளைப் பாராமல் மோ
னமாய் தந்தசுத்திசெய்து நாவைவழித்து, இடதுபுற
த்திற்போட்டு மய்க்கத்திலேனும் வலது புறத்துமிழ்
ந்தால் எரிவாய் நிரையத்து வீழ்வார் ஆதலால் இடது
புறத்தில் உமிழ்ந்து, நீராடல் பூசை நியதி புசிப்பு-
ஓமம் இவை செய்யுமிடத்து இரண்டுவஸ்திரத்தோடு
செய்யவேண்டும் ஓமம் அர்ச்சனை தியானம் ஜெபம் ஸ்நா
னம் புசிப்பு மலசல விசர்ச்சனம் இவைசெய்யுங்கால்
மௌனமாயிருக்கவேண்டும். கிணறு வாவி நதி கெங்
கையாதி நதி புணரிசங்கமம் கோயிற்றீர்த்தம் இவை
ஒன்றுக்கொன்று விசேடம் இவற்றுள் ஐந்துகை மண்
கரையில் எடுத்து உந்தியளவு நீரில் உத்தரபூர்வம் நோ
க்கி கண் காது மூக்கு இவைகளை மூடிச் சண்முக முத்
திரையோடு ஸ்நானஞ்செய்து ஈரத்துகிலுடுத்து செய்க
ருமம் நிஷ்பலமும் அசுத்தமுமாம் ஆதலின் ஐப்பசிழை
கொண்ட கடி சூத்திரத்தை மூன்றி லொருகூறு இடது
புறந் தொங்க உந்தியளவாக வலதுபுறமாகச் சுற்றிமுடி
ந்து காய்ந்த கோவணமும் வஸ்திரமு முடுத்து கடவு
ளையுங் குருவையுந் தியானித்து ஆசாமன் முன் தெ
ய்வத்தின்முன் அக்கினிமுன் பொல்லாப்பூமி எதிர் நீ
சர்முன் ஆற்றில் இவ்விடங்களல்லாத இடத்தில் வடக்
கு நோக்கி நிலத்தைப் பாராமல் ஒருகையா லொருவி
ரலாலிடுவனதை யொழித்து, பூதி சிந்தாமல் அணிந்து.
குருவை அடைவாயாக. குருவாவார் கங்கையாதி நவதீர்
த்தக் கரையில் உதித்து அங்கே வசிப்பவராய் சதுர்வர்
ணத்தவராய் அங்கவீனமின்றி நன்மனமுடையவராய்
மிகவும் நெடுமை குறுமை, பருமை வெளுமை கரு
மை செம்மை காக்கைக்கண் குழிந்த கண் பரியவுதடு
பரிபல்நெரிகுரல் வாதபித்த காசநோய்தருணம்மூப்பு
கோபம் துர்க்குணம் சோம்பு கொடுமை மறவி இவை
யில்லாதவராய் சமையதீட்சை, விசேடதீட்சை நிர்வா

ணதீட்சை, இம்மூன்றும் பெற்று அதற்கேற்ற அநுட்
டானங்களை யநுட்டித்து பின்பு அபிஷேக முடையவ
ராய் வேதாகம மிகவுந் தெரிந்து அவற்றுள் கூறிய கிரி
யதார்த்த லட்சணங்களைத் தெளிவாயுணர்ந்த ஆசிரிய
ரை அடைந்து அவர்க்கேற்க நல்லொழுக்கமாக நடந்
தால் அவர் உமக்கு பன்னிரண்டு வருஷத்திற்குப் பி
ன்பு சமையதீட்சை செய்வர். அத்தீட்சையைப் பெற்
று குளிர்ந்த நீரில் ஸ்நானஞ்செய்து நித்திய கன்மமு
முடித்துகொண்டு வெளியே புறப்பட்டு தூலலிங்கமாகி
ய கோபுரத்தை வணங்கி கோயிலுட்சென்று பத்திரலிங்
கமாகிய பலிபீடத்தையும் இடபதேவரையு நமஸ்கரித்
து திருவலங்கட்டு மெய்யூகி தன் நாதனை உளத்தில் மலரெ
டுத்து இண்டை முதலாகிய மாலை தொடுத்து சிவபெ
ருமான் முடியிற் சாத்துவித்து கண்டு மகிழ்ந்து இசை
யோடு தோத்திரஞ்செய்து கந்தவர்க்கங்களிலும் தூப
மிட்டு ஆனையாற்றிருவிளக்கிட்டு வணங்கிக்கசிந்துரு
கி ரோமஞ் சிலிர்ப்ப, கண்ணீர் சொரிய சிவபிரானே,
யடியேனுடைய ஜனன மரண துன்பங்களை நீக்கியடி
யேனை யாட்கொண்டருள்கவெனப்பிரார்த்தித்து பின்பு
ஆசிரியரைப் புட்பத்தா லர்ச்சித்து வணங்கியவர் மனை
வியாரை மனோன்மனியாகப் பாவித்து அவருடைய
திருவடியைத் தீண்டாமல் தன் பெயரைச்சொல்லி பூக்
களைப் பூமியிலே தூவிவணங்கி சிவபத்தருடைய ஏவ
ல்களை யவரேவு முன் குறிப்பாலறிந்துதெவிட்டாத விரு
ப்பம் பொருந்த அவ்வடியார்களை அன்னாதிகளைப் புசிப்
பித்து நீங்காத இனிமையாகிய ஆசீர்வாதத்தைப் பெற்
று சரீரமெடுத்ததனாலே பெறும்பயனை யின்றல்லவோ
பெற்றேனென முகமன்கூறிப்பின்பு போசனஞ்செய்து து
விசர் மூவருஞ் சற்சூத்திரருமே புராணஞ்சொல்லத்தக்க
வராதலினவரிடமாய்ப்புராணங்கேட்கக்கடவீர், அயோ
கவன் - சூதத்தா - சண்டாளனிவர்கள் புராணங்கூறினு
லவ்வூரைவிட்டு விலகவேண்டுமாதலா லவரிடமாக புரா

ணைக் கேட்பவரையும் பாராதொழிவீராக. விசேஷ தீ
க்ஷைபெற்று ஆன்றெடுத்த மணமுள்ள புதிய மலர்
தூபதீபங்கள் திருமஞ்சனம் - திருவமுது முதலிய தி
ரவியங்களையுஞ்சேகரித்து ஆசனம்பூசித்து அதன்மேல்
வித்தியா தேகமாகிய மூர்த்தியை கற்பித்து அதில் மூர்
த்திமானாகிய சுத்த சிவத்தை தியானித்தாவாகித்து
உத்தமான பத்தியினாலே யேகாக்ரமான மனதோடுப
சரித்து பிரார்த்தித்து தோத்திரஞ்செய்து விருப்பத்
தோடு அக்கினி காரியத்தையுஞ் செய்து வருவீராக-
பின்பு நிர்வாண தீக்ஷைபெற்று - பஞ்சேந்திரியங்களை
பொருக்கிரோசகபூரகவாயுக்களைத் தடுத்து கும்பித்திரு
ந்து பிராணவாயுவை சுழுமுனையி னிறுத்தி தனது சரீ
ரத்துள்ளே முக்கோண முதலிய வாருதாரங்களை யறி
ந்தவற்றில் பதுமதளமதிமீதவனை யக்கரங்க ளாகிய
பொருளை யறிந்து தியானித்து அங்கே மூலாதாரத்தில்
அக்கினியை ஜ்வலிப்பித்து நாபிஸ்தானத்தில் குண்டலீ
சத்திஸ்வரூபமா யிருக்கு மமுதத்தை யுருகப்பண்
னி மற்றைய வாதாரங்களி னதோமுகமான பத்மங்களை
யதனாற்கொண்டு பேதித்து மேலேசென்று பிந்துத் தா
னத்தின் வழியேயிறங்கி பெருகி நின்றவமுததாரையைத்
தனது புலமுற்றும் நிறையச் செய்து நிர்மலத சோதியான
சிவத்தை தியானித்திருப்பது முதலாக அஷ்டாங்க
யோகத்தை பாபங்கெடும்படி செய்து வருவீராக.

பின்பு அனுக்கிரகத்தசித் தூருவாகிய பரமேஸ்வரன்
கருணையாற் கூறிய வேதமுதலியசகல நூலும் லோகாயத
முதலிய சமய சித்தாந்த முந்தெரியவேண்டும்-அங்ஙன
மெல்லா நூலு மறியாமையால் வருங்குற்றமென்னை மந்
திரத்தாற் பாம்பு முதலிய நடை பந்தலும் - அப்பா
ம்பு கடிப்புண்டிறந்தவ ரொழுகைமுதலிய விஷநீக்கமுங்
கனவினுங் கல்வியறியாமடவார் பேய்க்கோட் பட்டுழி
மந்திரவாதிபோமுஞ் சக்கரத்திம் பிழையுளவேல் அதை

த்திருத்துவதும் பழகாதபாஷை பேசுவதும் - மந்திர வாதி மாரணந் தம்பனமோகன முதலியவை செய்வது ஞ் சோதிடர் இச்சாதகனுக் கின்ன வருஷத்தி லின்ன மாதத்தி லின்னவாரத்திற் கலியாணமென்று கூறியப டியே நடக்கின்றதையும்-பூமி சலமியந் தெரிந்தவரிவ் விடத்திற் கரியுமென்பும் இருக்கின்றதென் றெடுத்துக் காட்டுவதையும் அஞ்சனக்காரர் புதையலெடுப்பதையு ங் கண்ணுண்ட வெறியாலறியாது சிலர் தெய்வமில்லை யென்று மெய்ந்நூ லுணராப் பாமரசபைமெச்சப் பே சும்போது நீயு நாமே பிரமமென்றிருந்த பழக்கவாசனை யான் மயங்குவை யாதலினங் கடவுள்கூறிய வெல்லா நூலுமுணரவேண்டும்- இல்லம் தெய்வமில்லை யென் னும் பயித்தியம் கொஞ்சமுண்டேல் லக்கனத்துக்கா வது - பன்னிரண்டா மிடத்துக்காவது குருசம்பந்த மிருக்கும்சாதகன் றானே தெய்வபத்தி யுடையவன் அதை ப்பார்த்தால் அப்பயித்தியமும் தானே நீங்கிப்போம் இப்படிப்பட்ட த்ருயக்ஷமாய பிரத்தக்க நூலுமாத்திர மன்று மாத்மாவுங் கண்டது மில்லை.

போகத்தை மண்ணிற் கனவெனவிடுப் போய்விண்ணிற் கொள்ள
மோகத்தா லியலெல்லா முயன்றுழன் றொடொல்லாந் .. *
தாகத்திற் றண்ணீர்கனவிட்டுப்போய்த் தண்ணீர்கேட்டுச் *
சோகித்தே யுண்ணவெண்ணித் துயருறுவார்களந்தோ. *

தையலார்நடலாட்டத்தாமவரோடிங்கூடிச் ... ... *
செய்யதாமரையையென்றசீறடிசெம் பஞ்சூட்டி ... .. *
மெய்யெலாம்பூசுஞ்சூடும்வேடத்தார்மெய்யிற்கூடா *
மையன்மானுடாபொய்ம்மாக்கவேடத்தேமாய்கின்றாரே. *

வாசமார்குழலினார்கண் மணியல்குற்றடத்தேமூழ்கி ... *
நேசமார்குமுதச்செவ்வா யமுதினைநிறையவுண்டு ... ... *
தேசுலாமணிமென்றோண்மேற் சேர்ந்துவீற்றிருந்திடாதே... *
மாசுலாமனத்தோரொல்லா மறுமைகொண்டழிவர்மன்னே. *

மதிநிலாநுதலாரோடு மணிநிலாமுன்றிலேறி ... ... *
முதிர்நிலாவெறிப்பச்செவ்வா யிளநிலாமுகிழப்பமொய்த்த *

சதிர்நிலாவடங்கொள்கொங்கைக் கண்கண்மார்பகலமூழ்கும் *
புதுநிலாவியநன்போகம் விடுவர்புன்சமையத்தோரே. *

ஊடுவ துணர்வ துற்ற கல்விமங்கையனாயுள்கி ... ... *
வாடுவ தடியில்வீழ்ந்து வருந்துவ தருந்தவம்பின் ... ... *
கூடுவ துணர்வுகெட்டுக் குணமெலாம்வேட்கையாகி ... *
நீடுவதின்பமுத்தி யிதற்கினின்றார்கண்முத்தர். *

வீட்டினையுளதென்றோடி மெலிவதிங்கென்னைவீடு .. ... *
காட்டுவோர்கண்டோர்கேட்டோர்கரியவையுண்டேற்காட்டீர் *
நாட்டினிலரசனானைக் கிசையவேநடந்துநாளு ... ... *
மீட்டியபொருள்கொண்டிங்கே யின்பத்துளிசைந்திடீரோ *

என்றிவ்வாறு ஸ்திரியை யநுபவிப்பதே முத்தியென்று உலகாயதன் கூறுவானைப்போதுன் பூர்வசேட்டையைநினைத்தாலவன் வசமாவாயாதலின் அச்சேட்டையை யொழிவாயாக-பூர்வசேட்டையாவது (பரமாசாரியனைப் போல நடித்துன் வசப்பட்டவனைப் பிரமோபதேசம் பெற்று நான் வேதாந்த சாத்திரங் கேட்கவேண்டு முதலாம் ரக்ஷணையோடு வாருமென்று அத்தக்ஷணையான் மதுமாமிச பக்ஷணஞ்செய்து காமவெறி கொண்டு பந்தமுற்றது முத்திபெற்றது மின்று நாஸ்தியானந்தியாதலின்றே ஞானந்தமாயிருப்பதே காரியமென்று விதவைக் குபதேசித் தவ்வாறிருப்பதுதான்) உனக்கேதோ சிவ புண்ணியத்தினாலே தக்ஷிணாமூர்த்தி சன்னிதியிற் காஷாயம்வாங்குவதுங் கொடுப்பதுமா யிருக்கின்றாயாதலின் கடவுட் காதகிலிருக்கு நூலேயே நூலாகக்கொண்டு நீ முன் விதவைக்கு நூற் போதித்துன் னிஷ்டத்தை நிறைவேற்றிக்கொண் டாங்கு கண்ணனார்ச்சனனுக்குபதேசித்துத் தன்னிஷ்டத்தை நிறைவேற்றி கொண்ட நூன்முதலியவற்றை நீக்கி யுய்வாயாக.